
# கர்த்தருடைய வசனம்



ஆதியிலே கர்த்தருடைய வசனம் (வார்த்தை) சகலத்தையையும் சிருஷ்டித்தது. அந்த வார்த்தை நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோருடன் உறவாடியது. வாக்குதத்தங்களை வாக்குபண்ணியது. மோசே, யோசுவா ஆகியோரை வாக்குதத்தங்களை நோக்கி நடத்தியது. சாமுவேல், தாவிது ஆகியோரை ஆளுகை செய்து ஆள வைத்தது. ஏசாயா, எசேக்கியேல் ஆகியோருக்கு வெளிப்பட்டது. ஆனால், அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார் **(யோவான் 1:14)**.

ஏனெனில், அவர்கள் நம்மை அல்லாமல் பூரணராகாதபடி விசேஷித்த நன்மையானதொன்றைத் (வார்த்தை மாம்சமாகி) தேவன் நமக்காக முன்னதாக நயமித்திருந்தார் **(ஏபிரேயர் 11:40)**. ஆதலால், நாம் அவருக்குள் இருக்கிறோம், பிழைக்கிறோம், அசைகிறோம். அவராலன்றி, நம்மால் ஒன்றும் செய்ய கூடாது. பழைய ஏற்பாட்டில் தேவன் தமது ஆளுகையை மனிதர்கள் மத்தியில் வெளிப்படுத்தினார், ஆனால் புதிய ஏற்பாட்டில், அவர் நமக்குள்ளே ஆளுகை செய்கிறார். அந்த வார்த்தை ( வசனம்) நறுமணமாய் நம்மில் இருந்து மற்றவருக்கும் வீச வேண்டும். அல்லேலுயா! ஆமென்.

# இழப்புகளின் மத்தியில்



**இழப்புகள்** என்பது நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகும். அதிலும், யோபுவை போல ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு காரியத்திலும் இழப்புக்கள் ஏற்படும் பொழுதும், அடி மேல் அடி விழும் பொழுதும் நாம் நிலைகொலைந்து போகிறோம். யோபுவும், அப்படியே நிலைகொலைந்தே சாம்பலில் உட்கார்ந்தார் (யோபு 2 :8). அவருடைய பல கேள்விகள் எனக்கு ஏன் இந்த துன்பம் என்று கேட்பதாகவே இருந்தது. நாமும் அப்படியே பல வேளைகளில் தேவனிடத்தில் கேட்கிறோம்.

ஆனால், யோபுவுக்கு எப்படி அதற்கு பதில் வரவில்லையோ, நமக்கும் தேவன் அநேக நேரங்களில் ஏன் என்ற நமது கேள்விக்கு பதில் அளிப்பதில்லை. ஏனெனில், திரை மறைவில் தேவனுக்கும், சாத்தானுக்கும் இடையே நடந்ததை யோபு ஒருபோதும் அறியவில்லை. தேவனும் அதை அவருக்கு அறிவிக்கவில்லை.

ஆனால், வேளை வந்தபொழுது தேவன் தமது வல்லமையை யோபுவின் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். சாத்தான் யோபுவின் வாழ்க்கையில் எல்லாவற்றையும் ஒரே நாளில் எடுத்துக்கொண்டான். ஆனால் தேவன் அவை ஒவ்வொன்றையும் அவருக்கு இரட்டதனையாய் திருப்பித்தந்தார். ஏனெனில், யோபுவுக்கு ஒரு நிச்சயம் இருந்தது, அது "அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன்" (யோபு 13 :15) என்பதே. ஆம், அவர் வாழ்க்கையீல் இழக்க அவர் உயீரை தவிர வேறெதுவும் இல்லை, அவர், மனைவிகூட "தேவனைத் தூஷித்து ஜிவனை விடும்" (யோபு 2 :9) என்று கூறிவிட்டாள். ஆனால், அந்த சூழ்நிலையில் மத்தியிலும் அவர் தமது நம்பிக்கையை விடவில்லை. ஏனெனில், "என் மிட்பர் உயிரோடிருக்கிறார்"

(யோபு 19 :25) என்பதை அவர் அறிந்திருந்தார். அதுமாத்திரமல்ல, நித்திய வாழ்வைக்குறித்தும் அவருக்கு நம்பிக்கை இருந்தது (யோபு 19 :26,27).

அதனால்தான், தான் இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் இழந்த பின்பும், தான் நத்திய வாழ்வை இழந்து போகமாட்டேன் என்ற நம்பிக்கை அவருக்குள் இருந்தது. எனவே, தேவன் இவ்வுலகத்திற்குரியவைகளையல்ல, மேலானவைகளையே தேடின யோபுவிற்கு, ஆவிக்குரிய ஆசிர்வாதங்களையும், பூமிக்குரிய நன்மைகளையும் அளவில்லாமல் அளித்தார். இறுதியில் யோபு ஒன்றையும் இழந்து போகவில்லை, தோற்றுபோனவன் பிசாசே. எனவே, நாமும் தேவனை மேலானவைகளுக்காக தேடுவோம். அப்பொழுது நமக்கு சகலமும், சம்பூரணமாய் கூடக் கொடுக்கப்படும்.நாம் ஆசிர்வதிக்கப்பட்டவர்களாய் மட்டுமல்ல, பிறருக்கு ஆசிர்வாதமாயும் இருப்போம்.

இவற்றை நான் வேத வசன போதனையாக மட்டுமல்ல, வாழ்வில் அனுபவிக்கிறவனாகவே எழுதுகிறேன். எனவே, கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதிரிகளே நீங்களும் இப்படியே கர்த்தருக்குள் நிலைதிருப்பீர்களாக. கிறிஸ்துவை அறியாதவர்களாய், இப்படிபட்ட நம்பிக்கை இல்லாமல் வாழ்வில் தவித்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவை அறிவிப்போம். அவர்களையும் துன்ப இருளில் இருந்து விடுதலை செய்வோம். மாரநாதா! அல்லேலுயா, ஆமென்.

# தேவ பிரசன்னம்



இவ்வுலகத்தில் மனிதர்கள் எத்தனையோ காரியங்களையும், பொருள்களையும், மனிதர்களையும் நோக்கி ஓடுகிறார்கள். பிற மனிதர்களுடைய அன்பிற்காகவும், ஐக்கியத்திற்காகவும், மேலும் பல பொருள்களை அடைவதற்காகவும் பிரயாசபடுகின்றனர். ஏனெனில், அவைகள் தங்கள் வாழ்க்கையில் தங்களோடு இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். இவையாவும் நல்லதே. ஆனால், ஒரு மனித வாழ்க்கை பயணத்திற்கு இன்றியமையாதது **தேவ பிரசன்னமேயாகும்**.

இவ்வுலகில் நாம் விரும்புவது எதுவும் நம்மிடத்தில் இருந்தாலும், இல்லாவிட்டலும் தேவ பிரசன்னம் நமக்கு அவசியம் தேவை. ஏனெனில், தேவ பிரசன்னமே நாம் வாழும் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தை கொடுக்கிறது. தேவ பிரசன்னமே, தேவ சத்தத்தை அனுதினமும் கேட்பதற்க்கும், தேவ உறவை ஒவ்வொரு நொடிபொழுதும் உணர்வதற்க்கும் நமக்கு வழிசெய்கிறது.

ஆதாம், ஏவாளோடு தேவ பிரசன்னம் பரிபூரணமாய், பிரத்தியட்சமாய் இருந்தது. ஆனால், அவர்களோ அதை இழந்து போனார்கள். அப்போஸ்தலர்கள் தேவ பிரசன்னத்தால் நிரம்பி இருந்தனர். ஏனெனில், கிறிஸ்து அவர்களோடு வாழ்ந்தார், அனுதினமும் அவர்களோடு பேசினார், உண்டார், உறங்கினார், பல காரியங்களை அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார். பூமியில், அதுவும் மாம்ச சரீரத்தில் இருக்கும்பொழுது, தேவனோடு இவ்வளவு ஐக்கியமாய் இருப்பது அவர்களுக்கு கிடைத்த பாக்கியம்.

ஆனால் கிறிஸ்து பரமேற வேண்டிய வேளை வந்தபொழுதோ, பரிசுத்த ஆவியானவரின் முலமாய் தமது பிரசன்னத்தை அவர்களுக்கு வெளிபடுத்தினார். பெந்தெகொஸ்தே நாளில் சிஷர்கள் ஆவியை பெற்றபொழுது, அவர்கள்

ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு தங்களோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையை வல்லமையாய் வெளிபடுத்தினர். "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்" (அப் 3:6) என்று அப்.பேதுருவால் தைரியமாய் கூற முடிந்தது.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதிரிகளே கிறிஸ்துவின் பிரசன்னத்தை ஒவ்வொரு நொடிபொழுதும் நம் வாழ்வில் காண வாஞ்சிப்போமாக. ஆண்டவரின் பிரசன்னத்தோடு நம் வாழ்க்கையில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கும்பொழுது, நம் வாழ்வில் நாம் ஒருபோதும் இடறி விழமாட்டோம். பிற மனிதர்களின் ஐக்கியத்தை காட்டிலும், வாழ்வில் நாம் பெற்றிருக்கும் அல்லது பெற வாஞ்சிக்கும் எந்த பொருட்கள் தரும் சந்தோஷத்தை காட்டிலும், தேவ பிரசன்னம் நமக்கு அளவில்லாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் எப்பொழுதும் தரும்.

கிறிஸ்துவின் வருகையில் நாம் வாஞ்சிப்பதும் இந்த தேவ பிரசன்னத்தையே. ஆம், **கிறிஸ்து வரப்போவது நம்மை அவரோடு எப்பொழுதும் வைத்துக்கொள்ளவே**. அதிலும், மரணத்தை காணாமல் மகிமை அடைந்த சரீரத்தோடு, அவரண்டை சேர்வது மேலான பாக்கியம். அப்படிபட்ட மேலான பாக்கியத்தை பெற, நாம் அப்.பவுலை போல எப்பொழுதும் தேவ பிரசன்னத்தால் நிரம்பி இருக்க வேண்டும். அப்.பவுல் கைது செய்யப்பட்டு பலவித துன்பத்திற்குள்ளாக சென்ற வேளையிலும் அவரோடு இருந்த தேவ பிரசன்னம் சொல்லிமுடியாது. பின்வரும் வசனத்தை தியானித்து பாருங்கள்.

"மிகுந்த கலகம் உண்டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவானென்று சேனாபதி பயந்து, போர்ச்சேவகர் போய், அவனை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக் கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். **அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று** : பவுலே, திடன் கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்தது போல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும் என்றார்" (அப் 23: 10,11).

பவுல் ஒருபக்கம் மரணபோராட்டத்தில் இருந்தார், கிறிஸ்துவை போல பவுலையும் கொலை செய்து விடவேண்டும் என யூதர்கள் எண்ணினர் (அப் 23: 12). அப்படிபட்ட சூழ்நிலையின் மத்தியிலும், கர்த்தராகிய இயேசு, அண்ட சராசரங்களையும் தமது கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கிறவர், சகல ஜீவராசிகளுக்கும் ஜீவனை கொடுத்து வாழ வைத்து கொண்டிருப்பவர், **அந்த ஒரு மனிதனின் (பவுல்) அருகே வந்து நின்று** அவனோடு பேசுவதே, தேவ பிரசன்னத்தின் மகிமையும் மகத்துவமாகும். ஆம், பவுலுக்கு ஆண்டவர் ஏதோ உறக்கத்தில் தரிசனம் தரவில்லை, தமது வார்த்தையை மட்டும் அனுப்பவில்லை. அதிலும் மேலாக, பவுல் அருகே வந்து நின்று ஒரு தாயைப் போல அவரை தேற்றுகிறார், திடப்படுத்துகிறார்.

இப்படிபட்ட அனுபவமே நமக்கும் தேவை. தேவனோடு அவருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவரோடு நித்திய காலமும் இருப்பது போலவே,

**இவ்வுலகில் வாழ்கின்ற இந்த நாட்களிலேயே, பவுலை போல நாமும் தேவ பிரசன்னத்தை அனுபவிப்போமானால், அதுவே இவ்வுலகில் நாம் பெறும் மேலான பாக்கியமாகும்**. கர்த்தர்தாமே அப்படிப்பட்ட கிருபையை நம் ஒவ்வொருவருக்கும் அருள்வாராக. அல்லேலுயா, ஆமென்.

# கர்த்தருடைய கரம்



**கர்த்தருடைய கரம்** இஸ்ரவேல் மக்களை எகிப்தில் இருந்து கானானுக்கு நடத்தி சென்றது. கர்த்தருடைய கரத்தினால் நடத்தபடுவது என்பது தேவனுடைய முழு ஆளுகைக்குள் நாம் இருப்பதை குறிக்கிறது. ஆம், கர்த்தருடைய கரத்தினால் நடத்தப்படும் பொழுது நமது சுயசித்தத்திற்கு அங்கு இடமில்லை. நம்முடைய வழிகளுக்கும், எண்ணங்களுக்கும் மேலாக தேவனுடைய வழிகளும், எண்ணங்களும் (சித்தங்களும்) நம்முடைய வாழ்வில் நிறைவேறும். இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் நடத்தி சென்ற பாதையை அவர்களால் விளங்கி கொள்ள முடியவில்லை. சிவந்த சமுத்திரம் போன்ற தடைகளும், மாரா போன்ற கசப்புகளும், அவர்கள் பாதையில் வந்தபொழுது அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் தேவனே அவர்களை அவ்வழியில் கரம்பிடித்து நடத்தி சென்றார். மேலும் எதிரிகள் அவர்களை எதிர்த்த போதும், அவர்கள் விரும்பின இறைச்சி கிடைக்காத போதும், அவர்கள் செல்கின்ற பாதை தேவனால் வழிநடத்தப்படுகின்ற பாதை என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எகிப்தில் தொடங்கி அவர்கள் வழிபிராயணத்தில் எத்தனையோ அற்புதங்களை தேவன் மோசே மூலமாக செய்தபொழுதும், அவர்கள் தேவனுக்கும், மோசேக்கும் கீழ்படியவில்லை. அதைக் காட்டிலும் தாங்கள் விட்டு வந்த எகிப்திற்கே திரும்ப வேண்டும் என்பது அவர்கள் எண்ணமாயிருந்தது.

நம்முடைய வாழ்க்கை பயணத்திலும், கர்த்தருடைய கரம் நம்மோடிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாவத்தில் இருந்து நம்மை மீட்டெடுத்து நித்திய ஜீவவாழ்வை நோக்கி தேவன் நம்மை நடத்திக் கொண்டருக்கிறார் என்பதையும் நாம் அறிவோம். தேவன் வனாந்திரத்தில்

இஸ்ரவேல் மக்களை போஷித்து, பாதுகாத்து வந்தது போல நம்மையும் இவ்வுலக வாழ்வில் போஷித்து, பாதுகாத்து வருகிறார். ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை போஷித்து காபாற்றினது வனாந்திரத்தில் வாழ்வதற்காக அல்ல, வாக்குத்தத்த தேசமாகிய கானானை சென்று அடைவதற்காகதான். நம்மையும் தேவன் இவ்வுலகில் சகல நன்மைகளையும் கொடுத்து காப்பாற்றுவது பரம கானானாகிய பரலோகத்திற்கு வழிநடத்தி செல்வதற்கே. இப்படிப்பட்ட ஓர் உன்னதமான வாழ்க்கை பயணத்தில் நம்மைதேவன் வழிநடத்தி வருகிற வேளையில் நமக்கும் சிவந்த சமுத்திரம் போன்ற தடைகளும், மாரா போன்ற கசப்பான அனுபவங்களும் ஏற்படுகிறது.

ஆனால் நாம் கர்த்தருடைய கரத்தை உறுதியாய் பிடித்துக்கொள்வோமானால், தேவன் நிச்சயமாக இப்படிப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை வழுவாது கரம்பிடித்து நடத்திசெல்வார். ஏனெனில் **"நான் உன்னை விட்டுவிலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"** (எபி 13:5) என்று அவர் சொல்லியிருக்கிறாரே. மேலும் இஸ்ரவேல் மக்களை போல நாமும் சில காரியங்களை இச்சித்து பாதை விலகி போகும் பொழுதும், நம்மை கரம்பிடித்து **"வழி இதுவே இதிலே நடவுங்கள்"** (ஏசா 30:21) என்று வழி நடத்துகிறவரும் அவரே. பிரதான மேய்ப்பராகிய அவர் பின்னே அவர் சத்தத்துக்கு செவிக்கொடுத்து செல்வோமானால் நாம் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவோம் (யோ 10:3,9). அவர் கரத்தில் உள்ள கோலும், தடியும் நம்மை தேற்றும் (சங் 23:4).

அவரே நம்மை நீதியின் பாதையில் நடத்துகிறவர் (சங் 23:3). "நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்த பாதையில் மரணம் இல்லை" (நீதி 12:28). உன்னதப்பாட்டு 5:4 கூறுகிறது "என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார், அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது". ஒரு வேளை **நீங்கள் கர்த்தருடைய அன்பை அறிந்திருந்தும் அவரை விட்டு விலகி (வழி விலகி) இருப்பீர்கள் என்றால், அவருடைய கரம் உங்களை நோக்கி நீட்டப்படுகிறது**, அவர் உங்களை விட்டு போகும்முன்னே அவர் கரத்தை பற்றிக்கொள்ளுங்கள். வெளிப்படுத்தல் 3:20 கூறுவது போல "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்" என்று **உங்கள் இதய கதவை தட்டிக்கொண்டிருப்பதும் தேவனுடைய கரமே**. இப்பொழுதே அவர் கரத்தை பற்றி பிடித்துக்கொள்ளுங்கள், அவரே நம்மை நித்திய ஜீவகரையில் சேர்ப்பவர். ஆமென்.

# கர்த்தருடைய வழிகள்

## ஆபிரகாம் – லோத்து வாழ்க்கையிலிருந்து




ஆபிரகாம்,லோத்து இவ்விருவருடைய வாழ்க்கை பயணமும் ஒரே இடத்தில் இருந்தே ஆரம்பிக்கிறது(ஆதி 11:27). ” கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ” (ஆதி 12:1). என்றார். மேலும் “ நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்” (ஆதி 12:2). என்றும் கூறி ஆசிர்வதித்தார்

கர்த்தர் அழைத்த அழைப்பை ஏற்று தேவனை முழு நிச்சயமாய் விசுவாசித்து, வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர் என்று எண்ணி அவர் தன் சுயதேசத்தை விட்டு புறப்பட்டார். எபி 11:8 கூறுகிறது “ விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்”. இவ்வாறு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய வழிக்கு தன்னை ஒப்புவித்து அவருடைய சித்தத்திற்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்தார். “கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான்” (ஆதி 12:4).

இங்கு ஆண்டவர் ஆபிரகாமுக்கு மட்டும் தான் வாக்குத்தத்தங்களை கொடுத்து அழைத்தார், ஆனால் லோத்தும் ஆபிரகாமோடே கூட சென்றார். இங்கு லோத்து ஒரு சரியான தெரிந்தெடுப்பை செய்தார். ஆபிரகாமுடைய விசுவாசத்தை பின்பற்றி தானும் அவரோடே தேவனுடைய வழியில் செல்ல தன்னை அர்ப்பணித்தார்.

ஆதி 13:2 கூறுகிறது " ஆபிராம் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாயிருந்தான்". மேலும் ஆதி 13:5 கூறுகிறது "ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன". இங்கு நாம் காண்கிறபடி கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடி அவரை ஆசீர்வதித்து, அவர் பரதேசியாய் கூடாரவாசியாய் அலைந்து திரிந்தாலும், சகல ஆஸ்திகளையும் உடையவராக அவரை தேவன் ஆசீர்வதித்தார். அந்த ஆசீர்வாதம் லோத்துவுக்கும் தொடர்ந்தது. தேவன் ஆபிராகாமுக்கு சொன்னபடியே "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:2) என்பது நிறைவேறியது. ஆபிரகாம் தனக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை லோத்துவோடு பகிர்ந்து கொள்ள தயங்கவில்லை.

ஆனால் "அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று. ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று" (ஆதி 13 :6,7). இங்கு நாம் காண்கிறபடி தேவன் அவர்களுக்கு கொடுத்த ஆசீர்வாதமே, அவர்களுக்கு பிரச்சனை வர காரணமாயிருந்தது. இதற்கு காரணம் தேவனுடைய ஆசீர்வாதம் அல்ல, அதை முறையாக பயன்படுத்த தெரியாத மனிதர்களால் தான்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் சத்தியம் என்னவென்றால் நாம் தேவனை விசுவாசித்து அவரோடு நடக்கும்பொழுதும், அல்லது அவரது தரிசனத்தை பெற்ற தேவபிள்ளைகளோடு கூட சேர்ந்து நாம் நடக்கும்பொழுதும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் பலிக்கின்றன. ஆனால் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களை, தாலந்துகளை சரியாகப் பயன்படுத்த நமக்கு தெரியாத பொழுது அல்லது பயன்படுத்தாத பொழுது அதுவே நம்முடைய வாழ்க்கையில் பிரச்சனைகளை கொண்டு வருகிறது.

இங்கு, ஆபிரகாம் தேவ ஞானமாய் செயல்பட்டு இப்பிரச்சனையை சரிசெய்தார். ஆதி 13 :8,9 வசன்ங்கள் கூறுகிறது "என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்".

இங்கு தேவன் ஆபிரகாம் மூலமாய் லோத்துவுக்கு, ஒரு தெரிந்தெடுப்பை கொடுக்கிறார். ஆபிரகாம் ஆரானை விட்டு புறப்பட்டபொழுது அவரோடு தேவன் செய்த உடன்படிக்கையை, அவருடைய வாக்குத்தத்ததை விசுவாசித்து ஆபிரகாமோடு புறப்பட்ட லோத்து, இப்பொழுது தனக்கு தேவன் கொடுத்த ஆசிர்வாதங்களையும், ஐசுவரியங்களையும் காப்பாற்றிக்கொள்ள தேவனுடைய வழியை விட்டு விலகி செல்ல முடிவெடுத்தார்.

லோத்து ஒரு நிமிடம் சிந்தித்திருப்பார் என்றால், தான் ஏன் தன் சுயதேசத்தை விட்டு வந்தோம், தனக்கு இருக்கும் ஐசுவரியங்கள் யாரால் உண்டாயிற்று, ஆபிரகாமோடு இருக்கும் பொமுது தனக்கும், தனக்கு சொந்தமான யாவற்றிக்கும் இருக்கும் பாதுகாப்பு, எல்லாவாற்றிக்கும் மேலாக ஆபிரகாமோடு தேவனுடய வழியில் சென்று வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்தல், போன்ற இவை ஒன்றையும் லோத்து சிந்திக்கவில்லை.

அவர் கண் முன் இருந்ததெல்லாம் அவருடைய ஐசுவரியமும், அதை எப்படி தான் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமுமே.

இதனால் "அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்" (ஆதி 13:10,11).

இங்கு நாம் காண்பது முழுக்க முழுக்க லோத்துவினுடைய தெரிந்தெடுப்பு. அவன் தன் கண்ணுக்கு எது சிறந்ததாகப்பட்டதோ அதை தெரிந்தெடுத்தான்.

இதுவரை ஆவிக்குரிய கண்களோடு தேவ தரிசனத்தை நோக்கி ஆபிரகாமோடு நடந்த லோத்து, இப்பொழுது மாம்ச கண்களோடு தன்னுடைய சுய இச்சையை நோக்கி நடந்தான். அது அவனை தேவனோடும், தேவ பிள்ளைகளோடும் இருந்த ஐக்கியத்தை விட்டு பிரித்தது.

**இங்கு, ஒருவேளை மேலோட்டமாக பார்க்கும் பொழுது, லோத்து சிறந்ததை தெரிந்து கொண்டு சோதோம் கொமோராவில் தங்கினதை** (settle **ஆனதை**) **போல தோன்றலாம். இனி அவன் ஆபிரகாமை போல அலைந்து திரிய தேவையில்லை. தேவ தரிசனத்தையும், ஆசிர்வாதங்களையும் பெற்ற பலரும் லோத்தை போலவே தங்களுடைய வாழ்க்கையில் ஒரு நிலையை அடைய** (settle **ஆக**) **முயற்சிக்கிறார்களே தவிர தேவனோடு தொடர்ந்து நடக்க விருப்பமில்லாமல் இருக்கிறார்கள்.**

**ஆனால், மறுமுனையில் ஆபிரகாம் தொடர்ந்து தேவ தரிசனத்தில், கர்த்தருடைய வழிகளில் நடந்து கொண்டிருக்கிறார். இங்கு ஆபிரகாம் மூலமாய் நாம் கற்றுக் கொள்ளும் பாடம், முதலாவது தனது சகோதரனோடு தேவையில்லாத பிரச்சனையை தவிர்க்க முற்பட்டார். நாம் சகோதரர், நமக்குள் வாக்குவாதம் வேண்டாம்** (**ஆதி** 13:8) **என்றார். இரண்டாவதாக தெரிந்தெடுக்கும் உரிமையையும் லோத்துவுக்கே கொடுத்தார்** (**ஆதி** 13:9).

**இங்கு அவர் விட்டுக்கொடுத்து போவதை நாம் காணலாம், ஆனால் உண்மையில் அவர் தேவ தரிசனத்தோடு நடந்தார். ஆதி** 13:14-17 **வசனங்கள் கூறுகிறது** "லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன் என்றார்".

இங்கு ஆபிரகாம் கர்த்தருடைய வழியில் தன்னை நிலைநிறுத்தி கொண்டபொழுது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை மறுபடியும்

ஆபிரகாமுக்கு உறுதிப்படுத்தினார். ஆபிரகாம் லோத்தை போல கண்ணால் கண்டதை தரிசித்து நடவாமல், தேவனை விசுவாசித்து நடந்தார்.

தேவன் தனக்கு வாக்குபண்ணின தேசத்தையும், சந்ததியையும் தன்னுடைய மாம்ச கண்களால் காணாதிருந்தும், விசுவாசக் கண்களால் அவற்றை கண்டு தேவ பாதையில் தொடர்ந்து முன்னேறிச் சென்றார். தேவனும் தம்முடைய வாக்குத்தத்தில் உண்மையுள்ளவராய், ஆபிரகாமுக்கு தாம் வாக்குத்தத்தம் பண்ணின அனைத்தையும் நிறைவேற்றினார். அது மாத்திரமல்ல ஆபிரகாம் தேவன் செயல்படும் நேரத்திற்காக பொறுமையுடன் காத்திருந்தார். ஆனால் லோத்தோ "யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்" (ஆதி 13:12,13).

இங்கு வேதம் மிக தெளிவாகவும், அழகாகவும் கூறுகிறது, சோதோமின் ஜனங்கள் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளாய் இருந்தார்கள் என்று. லோத்துவுக்கு வெளிப்படையாய் சோதோமின் நிலையை ஆண்டவர் காண்பித்திருந்தும், தன்னுடைய சுயசித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, தன்னுடைய ஆஸ்திக்காகவும், தன் கண்கண்ட நல்ல நிலங்களுக்காகவும், தேவனுக்கு விரோதமானவர்கள் என்று தெரிந்திருந்தும் அவர்களோடு ஐக்கியம் கொள்ள லோத்து தயங்கவில்லை. தேவ தாசனாகிய ஆபிரகாமோடு ஐக்கியமாய் இருந்து சகலவற்றையும் பெற்ற லோத்து, இப்பொழுது அனைத்து ஆசிர்வாதங்களையும் பொல்லாதவர்கள் முன் சென்று வைத்து, அவர்களோடு ஐக்கியப்பட்டான்.

தன்னுடைய மந்தை மேய்ப்பர் மூலமாய் உண்டான ஒரு சிறு பிரச்சனைக்காக ஆபிரகாமை விட்டு பிரிந்த லோத்து, அதே செல்வத்தோடு அன்னிய இராஜாக்களின் மூலமாக சிறைபிடிக்கப்பட்டான். ஆதி 14:12 கூறுகிறது "ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்". இங்கு அவன் சிறைபிடிக்கப்பட காரணம் சோதோமிலே அவன் குடியிருந்ததே ஆகும். தேவ தாசனாகிய ஆபிரகாமோடு, சமாதானமாய் தங்கியிருந்த லோத்து, சிறு சச்சரவை பொறுத்துக் கொள்ள மனதில்லாமல், அவன் ஐக்கியத்தை விட்டு பிரிந்து, இப்பொழுது

சகலவற்றையும் இழந்து நிற்கிறான். இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் தேவனோடு அவர் வழிகளில் நடக்கும் பொழுது பாதை குறுகளாய் (கடினமாய்) இருந்தாலும் அதுவே நம்மை ஜீவ வழிக்கு கொண்டு செல்லும், ஆனால் கேட்டுக்கு போகிற வாசல் வழி விரிவாயும், விசாலமாயும் தோன்றும், அதன் முடிவோ மரணம் (இழந்து போகுதல்) (மத் 7:13,14). இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம் தேவனோ, ஆபிரகாமோ லோத்தை சோதோமிலே கூடாரம் போட தடுக்கவில்லை. ஏனெனில் பரம ஈவை (தேவ ஐக்கியத்தை) லோத்து ருசிப்பார்த்திருந்தும், அவன் மறுதலித்து போனபடியால் அவனை தேவன் தடுக்கவில்லை (எபி 6:4-6). இப்படிப்பட்ட காரியங்களை பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் இராஜாவாகிய சவுலின் வாழ்க்கையிலும், புதிய ஏற்பாட்டில் யூதாஸ் காரியோத்தின் வாழ்விலும் காணலாம். அவர்கள் செய்ய நினைத்ததையும் தேவன் தடுக்கவில்லை.

ஆனால் இங்கு லோத்துவுக்கு மறுபடியும் ஒரு வாய்ப்பை தேவன் வழங்கினார். ஆதி 14:13-16 வசனங்களில் "தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய மம்ரே என்னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது குடியிருந்தான். தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத் தொடர்ந்து, இராக்காலத்திலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்து, தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி, சகல பொருள்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்; தன் சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்கொண்டுவந்தான்".

இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், ஆபிரகாம் லோத்து சிறை பிடிக்க பட்டதை கேள்விப்பட்டபொழுது சற்றும் தாமதிக்காமல், லோத்து தனக்கு செய்த எதையும் யோசிக்காமல், அவனையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, தன்னுடைய ஜனங்களையும் பொருள்களையும் (ஆயுதங்கள்) அர்பணிக்க

தயங்காதிருந்தான். தீமைக்கு நன்மை செய்யும் எண்ணமும், தனக்குரியதை இழந்தாவது அவனை மீட்க வேண்டும் என்ற எண்ணமும், பாவிகளாய் தேவனுக்கு துரோகிகளாய், அவரை விட்டு பின்வாங்கி போன நம்மையும், நாம் வாழும் இந்த பூமிக்கு நம்மை போல வந்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, நம்மை மிட்டெடுத்த கிறிஸ்துவின் செயலுக்கு ஒர் நிழலாட்டமாய் இருக்கிறது. அதுமாத்திரமல்ல ஆபிரகாம் லோத்தை மட்டும் காப்பாற்றவில்லை, சோதோம் நாட்டையும் காப்பாற்றினான்.

இதனால் "உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்" (ஆதி 14:18-20). இந்த மெல்கிசேதேக்கை பற்றி எபி 7:3 கூறுகிறது "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்". இங்கு ஆபிரகாமுடைய மனநிலையும், அவனது செயலும் மறுபடியும் தேவனால் மெச்சப்பட்டு, மேற்கண்ட வசனத்தின்படி கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கும் மெல்கிசேதேக்கு மூலமாய் தம்முடைய ஆசிர்வாதத்தை வழங்கினார்.

அதுமாத்திரமல்ல "சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன். வாலிபர் சாப்பிட்டதுபோக, என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான்" (ஆதி 14:21-24).

**இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், எந்த இடத்திற்காக, வளத்திற்காக சோதோமை நோக்கி லோத்து சென்றானோ, அதே, சோதோமின் இராஜா ஆபிரகாமுக்கு சகலத்தையும் கொடுக்க முன்வருகிறான். ஆனால், ஆபிரகாமோ இந்த சோதோம் மட்டுமல்ல வானத்தையும் பூமியையும் உடையவராகிய தேவன் தன் வாழ்க்கையில் எதை தனக்கு தர விரும்புகிறாரோ அதை தவிர வேறு எதையும் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. தனக்கு ஒரு ஆசிர்வாதம் கிடைக்க வேண்டுமென்றால் அது தேவனால், தேவனுடைய வேளையிலேயே தர படவேண்டும் என்றும், தன்னுடைய சுய பெலனாலோ, மற்ற மனிதராலோ தனக்கு எதுவும் தேவையில்லை என்பதையும் அறிக்கையிட்டார்.**

**இதனால்** "இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்" (ஆதி 15:1).

**ஆனால் இவ்வளவு காரியங்கள் நடந்தபின்பும், சோதோம் மக்களும் தங்கள் பாவத்தில் இருந்தது மனந்திரும்பவில்லை, லோத்துவும் அவ்விடத்தை விட்டு வெளியே வரவில்லை. லோத்து ஆபிரகாமோடே கூட இருக்க கேட்டு இருந்தால், நிச்சயமாக ஆபிரகாம் லோத்தை சேர்த்து கொண்டிருப்பார். ஆனால் தேவன் மூலமாய் அவருக்கு இப்படி ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்ட பொழுதும், அவர் அதை அசட்டை செய்தார். முடிவு, சோதோமையும் அதன் குடிகளையும் அழித்துதான் லோத்தை மீட்டெடுக்க வேண்டி இருந்த்து.**

**இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம், தேவன் நமக்கு மனந்திரும்ப வாய்ப்புக்களை கொடுக்கும் பொழுது, அதை பயன்படுத்தி கொள்ள தவறுவோமானால், அதன் முடிவு எண்ணிப்பார்க்க முடியாததாயிருக்கும்.**

**ஆதியாகமம்** 18 **ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமை சந்திக்க மூன்று புருஷர்கள் வந்தார்கள். இவர்களை ஆபிரகாம் தன் வீட்டிலே வரவேற்று, அவர்களுக்கு உணவளித்தான். ஆதி** 18:5 **கூறுகிறது** "நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: நீ சொன்னபடி செய்

என்றார்கள்”. இந்த மூன்று புருஷர்களும், இரு காரியங்களை பூமியில் நிறைவேற்ற வந்தனர். ஒன்று ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தை உறுதிப்படுத்த, மற்றொன்று சோதோமை அழிக்க.

இம்மூவரில் ஒருவர் கர்த்தர் என்பதை ஆதி 18:9-15 வசனங்களில் காணலாம். இங்கு கர்த்தர் ஆபிரகாமிற்கு தரிசனமாகி இரு காரியங்களை அவனுக்கு வெளிப்படுத்தினார். ஒன்று “கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை” (ஆதி 18:14) என்பதும், ஆதலால் சாராள் நிச்சயமாய் ஒரு குமாரனை பெறுவாள் என்பதையும். இங்கு கர்த்தர் ஆபிரகாமுடைய விசுவாசத்தை மாத்திரமல்ல, விசுவாசத்தில் தடுமாறி கொண்டிருந்த சாராளையும் பெலப்படுத்த தாமே தரிசனமாகி வாக்குத்தத்தை உறுதிப்படுத்தினார்.

**ஆதி** 18:17-19 **வசனங்கள் கூறுகிறது** “அப்பொழுது கர்த்தர்: ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்”.

மேற்கண்ட வசனங்கள் தேவனே ஆபிரகாமை குறித்து கொடுத்த சாட்சி. இது எவ்வளவு மேன்மையானது. ஆபிரகாம் தான் மாத்திரமல்ல, தன்னுடைய சந்ததியையும் தேவனுக்குள்ளாக நடத்துவான் என்று தேவனே சாட்சி பகர்கிறார். முக்காலங்களையும் அறிந்த, ஆளுகின்ற தேவன் ஆபிரகாமை குறித்து இப்படியாய் சாட்சி கொடுத்து, அதனால் தான் செய்ய போகிறதை (சோதோமின் அழிவு) ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி 18:18) என்கிறார்.

இங்கு நாம் கற்றுக்கொள்கிற பாடம், நாம் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாக, தேவ நீதியை பின்பற்றுகிறவர்களாக, உலக ஐசுவரியங்களையோ, சுய பெலனையோ சாராமல் தேவனையே சார்ந்து கொள்ளும் பொழுது, தேவனே நாம் இருக்கும் இடத்திற்கு நம்மை தேடி வருகிறார், தன்னுடைய வாக்குத்தத்தங்களை நமக்கு உறுதிப்படுத்துகிறார், தான் செய்ய போகும் காரியங்களை நமக்கு அறிவிக்கிறார்.

சோதோமை ஆண்டவர் அழிக்க போகிறார் என்பதை அறிந்த ஆபிரகாம், தன்னுடைய சகோதரன் லோத்துவிற்காக மாத்திரமல்ல, அங்குள்ள கொஞ்ச நீதிமான்கள் நிமித்தம்மாவது அதை அழிக்காதபடி, தேவனிடத்தில் விண்ணப்பித்தான்.

ஆனால் ஆபிரகாம் கேட்டது போல சோதோமில் பத்து நீதிமான்கள் கூட இல்லை. ஆகிலும் ஆபிரகாமின் வேண்டுதலின்படி, லோத்தை தேவன் சோதோமின் அழிவில் இருந்து காப்பாற்றினார். இங்கு நாம் கற்றுக்கொள்ளுகிற பாடம், பாவம் நிறைந்து, அழிவுக்கு நேராய் வைக்கப்பட்டுள்ள இந்த உலகத்தில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படும்படியாய் ஜெபிக்க வேண்டியது நம்முடைய கடமை. அப்பொழுது, தேவன் தம்முடைய நீதியின்படியும், நம்முடைய விண்ணப்பத்தின் படியும் காரியங்களை நிறைவேற்றுவார்.

ஆதி 19:1-3 வசனங்கள் கூறுகிறது "அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து: ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள். அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்".

இங்கு நாம் கவனிக்க வேண்டியது, கர்த்தர் லோத்தை காண வரவில்லை, இரண்டு தூதர்கள் மட்டுமே வந்தார்கள். வந்த அவர்களை, லோத்து வரவேற்றும் அவனோடு தங்க அவர்கள் விரும்பவில்லை. பின்பு வருந்தி அழைத்தபொழுது சென்றார்கள். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம் தேவனோடு எப்பொழுதும் நெருங்கி வாழும் ஆபிரகாமோடு தேவன் உறவாட விருப்பமுள்ளவராய் இருக்கிறார்.

ஆனால் அனலுமின்றி, குளிருமின்றி வாழும் வாழ்க்கையை உடைய லோத்தை போன்றவர்களின் வாழ்வில் தேவன் இடைப்பட்டாலும், தேவனோடு ஒரு ஆழமான உறவு இப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்காமற் போகிறது.

இவர்கள் தேவ கிருபையையும், தயவையும் தங்கள் வாழ்வில் பெற்றிருந்தாலும், தேவ பிரசன்னத்தையும், தேவ ஆளுகையையும், தேவ வழிநடத்துதல்களையும் தங்கள் வாழ்வில் உணராதவர்கள். ஆனால் ஆபிரகாம் போன்றோர் தேவனை நோக்கி கூப்பிட்டபொழுது, நீ சொன்னபடியே செய் (ஆதி 18:5) என்று மறு உத்தரவு வந்தது.

தொடர்ந்து ஆதி 19ஆம் அதிகாரத்தில், நாம் பார்க்கும் பொழுது சோதோம் மக்களின் பொல்லாப்பையும், லோத்துவின் செயல்களையும் நாம் காணலாம். லோத்து நீதிமானாய் வாழ நினைத்தாலும், அவர் தன்னுடைய சொந்த அறிவையும், பெலனையுமே சார்ந்திருந்தார் (ஆதி 19:6,7).

இறுதியில் அவருடைய அறிவு, பெலன் எல்லாம் ஒன்றுமில்லாமல் போனது. ஆதி 19:9 கூறுகிறது "அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள்".

**இங்கு நாம் காண்பது, எந்த சோதோமை கண்டு ஆசையாய், தன்னுடைய மிகுந்த ஐசுவரியங்களோடு வந்து தங்கினாரோ, அதே சோதோமின் மக்களால் "பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது" என்ற பதிலை பெற்றார். இதில் நாம் கற்றுக்கொள்கிற பாடம், நம்முடைய தாலந்துகளை, ஐசுவரியங்களை உலக மக்களோடு நாம் ஐக்கியப்பட்டு, அதை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும் பொழுது, அதை அநுபவிக்கிற வரைக்கும் நம்மோடு இருக்கும் மக்கள், பின்பு நன்றி கெட்டவர்களாய் நம்மையே பரதேசி என்று சொல்லும் நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். மேலும் அவனை மனதின் பிரகாரம் மாத்திரமட்டுமல்ல, சரீர பிரகாரமாகவும் காயப்படுத்த அவர்கள் நெருக்கினார்கள். இதுவே தேவ ஐக்கியத்தை, தேவ பிள்ளைகளின் ஐக்கியத்தை விட்டு உலகத்தோடு ஐக்கியப்படும் ஒருவனுடைய முடிவு.**

**ஆனால், லோத்துவின் வாழ்வில் இன்னும் தேவதயவும், இரக்கமும் வெளிப்பட்டது. ஆதி** 19:10 **கூறுகிறது** "அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப் பூட்டி", மேலும் ஆதி 19:15,16 வசனங்களில்

“கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்”. இங்கு எப்படியாய் தேவன் லோத்துவையும், அவன் குடும்பத்தையும் இரக்கமாய் காப்பாற்றுகிறார் என்பதை நாம் காணலாம்.

ஆனால் தேவன் இவ்வுளவாய் இரங்கியும், லோத்துவின் மனைவி கீழ்படியாமல் பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள் (ஆதி 19:26), சோதோம் அழிக்கப்பட்டது.

ஆதி 19:27-29 வசனங்களில் “விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய், சோதோம் கொமோரா பட்டணங்களின் திசையையும், சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான்; அந்தப் பூமியின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று. தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்”.

இங்கு வேதம் தெளிவாக கூறுகிறது, லோத்தின் மேல் பாராட்டப்பட்ட இரக்கம், தேவன் ஆபிரகாமை நினைத்தாலேயே. ஆபிரகாமுக்கு லோத்து தீங்கு செய்திருந்தும், லோத்து நன்றாய் இருக்க வேண்டும் என்பதே ஆபிரகாமின் எண்ணமாய் இருந்தது. இங்கு நாம் கற்றுக் கொள்கிற பாடம், இவ்வுலக மக்களின் மூலமாக, தேவ பிள்ளைகளாகிய நமக்கு எந்த நன்மையும் வரப்போவதில்லை, அவர்கள் தேவ பகைஞராய் தேவனுக்கும், நமக்கும் விரோதமான காரியங்களையே செய்கின்றனர். ஆகிலும் நாம் அவர்களுக்காக தேவனிடத்தில் வேண்டும் பொழுது, அவர்கள் மீதும் தேவ இரக்கம் பாராட்டப்படும். இது ஆபிரகாமின் வாழ்க்கையில் அவனிடத்தில் காணப்பட்ட

உயரிய பண்புகளில் ஒன்றாகும். நாமும் இப்படியாக காணப்படவே தேவன் விரும்புகிறார்.

மேலும், அந்நிய இராஜாக்கள் லோத்தை சிறைபிடித்து சென்ற பொழுது லோத்துவிற்காகவும், அதில் உள்ள நீதிமான்களுக்காகவும் ஜெபிக்க மாத்திரமே செய்தார். இங்கு நாம் கற்றுக் கொள்ளும் பாடம், தேவன் தம்முடைய நீதியை நிறைவேற்றும் பொழுது (சுனாமி போன்ற அழிவுகள், பஞ்சங்கள் போன்றவை), நாம் அமைதியாக ஜெபிக்க வேண்டுமே ஒழிய தேவனையும் மிஞ்சிய நீதிமான்களாய் செயல்படுதல் கூடாது. இங்கு தான் சென்று காப்பாற்றாமல் இருந்தாலும், தேவன் நிச்சயமாய் லோத்தை காபாற்றுவார் என்று ஆபிரகாம் விசுவாசித்தார்.

இவைகளுக்கெல்லாம், நேர் எதிர்மறையாக லோத்துவும், அவன் குடும்பத்தினரும் செயல்பட்டனர். அழிவில் இருந்து தேவன் அவர்களை தப்புவிக்க நினைத்தபொழுதும், அவர் தன் சொந்த அறிவையும், பெலனையுமே சார்ந்திருந்தார், தேவ வார்த்தைக்கு கீழ்படியாமல், அவருக்கே ஆலோசனை கூறினார் (ஆதி 19:19,20).

ஆனால், அப்பொழுதும் தேவன் அவருக்கு இரக்கம் பாராட்டி அவரை காப்பாற்றினார் (ஆதி 19:21,22). ஆனாலும் கீழ்படியாமையினாலே, அவர் மனைவி உப்புத்தூண் ஆனாள். இப்படிப்பட்ட காரியங்களை நாம் இப்பொழுதும் நம் காலத்திலும் காணலாம். தேவன் இரக்கமாய் எத்தனையோ வழிகளில் தம்மை இவ்வுலக மக்களுக்கு வெளிப்படுத்தி இருந்தும், இன்னும் மனிதர்கள் பணத்தையும், சுய பெலனையும் தங்களுடைய அறிவையுமே சார்ந்திருக்கிறார்களே தவிர தேவ சத்ததிற்கு செவி சாய்க்காமல் இருக்கிறார்கள். இவ்வளவு காரியங்கள் நடந்த பின்பாவது லோத்து ஆபிரகாமிடம் சென்றிருக்கலாம். ஆனால் அவனோ அப்படி செய்யவில்லை (ஆதி19:30).

ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கு “கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்” (ஆதி 18:19) என்று அவனை குறித்து கர்த்தர் சாட்சிக்கொடுத்தார். அதுபோலவே ஈசாக்கு, யாக்கோபு, யோச்சேப்பு, தாவீது என்ற அவன் சந்ததியார் தேவனுடைய வழியில் நடந்தார்கள்.

ஆனால் லோத்தோ தன் பிள்ளைகளுக்கு அப்படி கற்பிக்கவில்லை, அதன் விளைவு அவர்கள் சோதோமின் வழியை பின்பற்றி மோவாப், அம்மோன் என்னும் தேவனுக்கு பிரியமில்லாத சந்ததியை பிறப்பித்தார்கள் (ஆதி 19:31-38)..

இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம் ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி பொறுமையோடு நீதியாய் தேவனுடைய வழிகளில் நடந்தான். அவன் கடந்து சென்ற பாதைகள் குறுகலானதாய், வனாந்திரமானதாய் காணப்பட்டாலும் முடிவில் தேவன் அவனுக்கு தம்முடைய வாக்குத்தத்தையும், ஆசிர்வாதங்களையும் தான் கூறியபடியே வழங்கினார். அதனால் இந்நாள் வரைக்கும் அவனுடைய சந்ததியார் (இஸ்ரவேலர்) இப்பூமியில் ஒரு ஜாதியாய் (நாடாய்) வாழ்கின்றனர். மனுகுலத்தின் இரட்சிப்பும் அவன் சந்ததி மூலமாகவே உண்டாயிற்று.

ஆனால் லோத்தின் சந்ததியோ இடம் தெரியாமல் அழிந்து போயிற்று. அவன் சந்ததியார் தேவனுக்கு விரோதமாகவே வாழ்ந்தனர். II பேதுரு 2:7,8 வசனங்கள் கூறுகிறது "அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க".

**இங்கு நாம் காண்கிறபடி தேவன் அவரை நீதிமான் என்றே நியாயந்தீர்க்கிறார், அவர் இரட்சிக்கப்பட்டார் என்றும் வசனம் கூறுகிறது. அது உண்மையே. ஆனால் அவரால் அவருடைய நீதியால் அவரை இரட்சித்துக்கொள்ள முடிந்ததே தவிர தன்னுடைய சந்ததியையோ, தன்னை சார்ந்திருந்தவர்களையோ அவரால் இரட்சிக்க முடியவில்லை.**

**ஆனால் ஆபிரகாமோ தனக்கும், தனக்கு பின்வரும் தன் சந்ததிக்கும், தன்னை சார்ந்திருந்தவர்களுக்கும் ஆசிர்வாதமாய் இருந்தார். தேவன், தன்னை ஆபிரகாமின் தேவன் (யாத் 3:6) என்று கூறினார். அவர் தேவனுடைய சிநேகிதன் (யாக் 2:23) எனப்பட்டார். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவும் ஆபிரகாமின் சந்ததியிலேயே வந்தார்.**

**ஆதியாகமத்தில் லோத்தை பற்றி விஷேசமாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் தேவன் லோத்தை மறக்கவில்லை. லோத்து வாழ்வில்**

**என்னென்ன தவறு செய்தாரோ, அதை அப்படியே தலைக்கீழாக தேவன் ரூத்தின் வாழ்க்கையில் மாற்றினார்.**

**மோவாப்பிய பெண்ணாகிய ரூத், ஆபிரகாமின் சந்ததியில் வந்தவனாகிய எலிமெலேக்கின் மகன், மக்லோனை மணந்தாள். ஆனால் அவனோ இறந்து போனான். எலிமெலேக்கின் மனைவியும், ரூத்தின் மாமியுமாகிய நகோமி மோவாப்பை விட்டு இஸ்ரவேல் தேசத்தில் உள்ள பெத்லகேமிற்கு திரும்பினாள். இங்கு ரூத் ஓர் சரியான முடிவை எடுத்தால். தான் தன் மாமியாராகிய நகோமியோடு பெத்லகேம் சென்றாள், தான் உணவிற்கு கூட கஷ்டப்பட வேண்டியிருக்கும், தன்னுடைய மாமியாரையும் தானே காப்பாற்ற வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக பெத்லகேம் ஓர் அந்நிய தேசம் என இவை எதைப் பற்றியும் அவள் கவலைப்படவில்லை.**

**அவள் இருதயத்தில் இருந்தத்தெல்லாம்** “நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடேகூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை” (ரூத் 1:16-18).

**இங்கு ரூத் நகோமியை மட்டும் பிடித்துக் கொள்ளவில்லை, கர்த்தரையும் பற்றிக்கொண்டாள். தேவ ஐக்கியத்தில் இருந்தும், ஆபிரகாமின் ஐக்கியத்தில் இருந்தும் பிரிந்து உலகப்பொருளுக்காக வாழ்ந்து, இறுதியில் தேவனுக்கு பிரியமில்லாத ஒரு சந்ததியை லோத்து ஏற்படுத்தினான்.**

**ஆனால், உலகமாகிய மோவாப்பை விட்டு, தான் துன்ப பட வேண்டிருக்கும் என தெரிந்திருந்தாலும், கர்த்தரையும், நகோமியையும் பற்றிக் கொண்ட ரூத், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தோன்றிய தாவீதின் சந்ததியில் அங்கமானாள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், தாவீதும் பெத்லகேமில் பிறக்க அவளும் ஒரு காரணமானாள்.**

**ரூத்தை பற்றி போவாஸ் கூறும் பொழுது** “உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்” (ரூத் 2:11,12).

**அவன் கூறியபடியே போவாஸ் ரூத்தை மணந்து தாவீதின் சந்ததியில் தானும் ஒரு அங்கமானான். லோத்து தன் வாழ்க்கையில் எதை எல்லாம் தவறாய் செய்தானோ, அவன் சந்ததியில் வந்த ரூத் அதை அப்படியே சரிப்படுத்தி மறுபடியும் தேவ சந்ததியில் தன்னை இணைத்துக் கொண்டாள். இதில் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் தேவன் நம்மை ஒருபோதும் மறப்பதில்லை. பாவிகளாய், தேவனுக்கு துரோகிகளாய் இருந்த நம் முன்னோர்களின் சந்ததியில் வந்த நம்மையும் தேவன் இரட்சித்திருப்பது, நாமும் தேவ சந்ததியில், தேவ குடும்பத்தில் பங்குள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்கே.**

**இதுவரையில், நாம் பார்த்த காரியங்களின் சாராம்சம் என்னவென்றால், தேவனுக்கு பயந்து தேவ வழியில் வாழ்ந்த ஆபிரகாமின் வாழ்க்கையில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களும், ஆசிர்வாதங்களும், அதே நேரத்தில் கர்த்தருடைய வழியை விட்டு விலகி போன லோத்தின் பரிதாப முடிவும், ரூத்தின் மூலமாக தேவன் மறுபடியும் லோத்தின் சந்ததியில் இடைப்பட்டு அவனை தேவ சந்ததியில் ஓர் அங்கமாக்கினதையும் கண்டோம்.**

**இவை யாவும் மனித வாழ்வில் தேவ ஆளுகையையும், அவருடைய இரக்கத்தையும், காலாகாலங்களாய் தேவன் தம்முடைய திட்டத்தை எவ்வாறு நேர்த்தியாய் மனிதர்களின் வாழ்க்கையில் செயல்படுத்தி வருகிறார் என்பதையும் நமக்கு அறிவிக்கின்றன.**

**தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசிர்வதித்து, அநேகருக்கு பிரயோஜனமாக்குவாராக ஆமென், அல்லேலூயா.**

# தேவனை சார்ந்திருத்தல்

## (73 ஆம் சங்கீதத்திலிருந்து)



இந்த தியானத்தை வாசிக்கும் முன்பு, தயவுசெய்து **73ஆம் சங்கீதத்தை** ஒருமுறையாவது தியானிக்கும்படியாய் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சங்கீதம் முழுவதும், இவ்வுலகில் வாழும் ஒரு தேவ பிள்ளையின் வாழ்க்கையும், உலக மக்களின் வாழ்க்கையும் ஒப்பிட்டு கூறப்பட்டுள்ளது. இச்சங்கீதம் ஆசாப்பின் சங்கீதம் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு ஆசாப்பின் பார்வையில், உலக மக்களின் வாழ்க்கை, ஒரு தேவ பிள்ளையின் வாழ்வை காட்டிலும் செழிப்பானதாயும், ஆசிர்வாதமானதாயும், பாதுகாப்பு நிறைந்ததாயும் காணப்படுகிறது. அதனால், அவர்களுடைய வாழ்க்கை பெருமையினாலும், தங்களை படைத்த இறைவனையே மட்டுபடுத்துவதாகவும் காணப்படுகிறது (சங் 73:3-12).

இன்று, இவ்வுலகில் வாழும் தேவ பிள்ளைகளாகிய நம்முடைய பார்வையும், உலக மக்களின் வாழ்க்கையை காணும்பொழுது இப்படியாகவே காணப்படுகிறது. உலகில் உள்ள எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள், தங்களை சிருஷ்டித்த சிருஷ்டிகரை குறித்து எந்த அறிவும் இல்லாமல், அதை அறிந்து கொள்ள விருப்பமும் இல்லாமல், உலகத்தின் காரியத்தின் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

எத்தனையோ மிகப்பெரிய வியாபாரிகளும், அரசியல்வாதிகளும், சினிமா நட்சத்திரங்களும், விளையாட்டு வீரர்களும், தங்கள் செல்வத்தையும், அதிகாரத்தையும், அழகையும், உடல் பெலத்தையும் நம்பி அவற்றை

பெருமையாய் எண்ணி, அதையே தங்கள் உலகம் (வாழ்க்கை) என்று கருதி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனை பற்றியோ, சத்திய வழியை பற்றியோ எந்த எண்ணமும் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையை நாம் காண்கையில், அவர்கள் வாழ்க்கையில் எந்த இடையூறும் இன்றி, அவர்கள் எதற்காக ஓடுகிறார்களோ அது அவர்களுக்கு வாய்ப்பதையும், அதனிமித்தம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சுக ஜீவிகளாய் வாழ்ந்து மனதின் பிரகாரமாகவோ, சரீர பிரகாரமாகவோ எந்த உபத்திரவமும் இன்றி வாழ்வதையும் காண்கிறோம்.

இதனால் அவர்கள் தேவனை மட்டுபடுத்துவதுடன், தங்கள் செல்வத்தை, அதிகாரத்தை, புகழை தக்க வைத்துக்கொள்ள, மற்ற மனிதர்களுக்கு தீங்கிழைப்பதையும் நாம் காண்கிறோம். **"மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக"** என்று II தீமோ 3:1 கூறுகிறது. அது **"எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும்"** இருப்பார்கள் என்றும் II தீமோ 3:2 கூறுகிறது.

அதே நேரத்தில் ஒரு தேவ பிள்ளையின் வாழ்வை குறித்து 73ஆம் சங்கீதத்தில் ஆசாப் கூறும்பொழுது **"நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன். நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலைதோறும் தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன்"** என்கிறார் (சங் 73:13,14).

இங்கு ஆசாப் கூறுகிறபடி, இப்பொழுது நம் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. நாம் நீதியாய் வாழ்வதினாலும், சத்தியத்தை பின்பற்றுவதினாலும் நமக்கு இவ்வுலகத்திலிருந்தும், இவ்வுலக மக்களிடமிருந்தும் எந்த நன்மையும் கிடைப்பதில்லை. அதற்கு பதிலாக தேவையில்லாத பிரச்சனைகளும், வாழ தெரியாதவர்கள், பிழைக்க தெரியாதவர்கள் என்ற பட்டமே தேவ பிள்ளைக்கு கிடைக்கிறது.

இங்கு நாம் காண்கிறபடி, ஒருபக்கம் தன் சுய பெலத்தை, ஞானத்தை, அதிகாரத்தை, அழகை நம்பி, இவ்வுலக வாழ்க்கையை வாழும் மக்கள், மறுபக்கத்தில் தேவனை சார்ந்து வாழும் தேவ பிள்ளைகள். மேலோட்டமாக, இவ்வுலக நடைமுறையை பார்க்கும் பொழுது, தங்களையே சார்ந்துகொள்ளும் உலக மக்கள், தேவனை சார்ந்துகொள்ளும் தேவ பிள்ளையை விட உயர்ந்து, செழித்து இருப்பதை போல காணப்படலாம்.

ஆனால் அதே சங்கீதத்தில் **"இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன்; நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது.**

**நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (சங் 73:16-19)** என்று ஆசாப் கூறுகிறார்.


இதிலிருந்து, தேவன் நீதியுள்ளவர் என்பதையும், துன்மார்க்கரின் வாழ்வை சடுதியில் முடிய பண்ணுகிறார் என்பதையும், அவர்கள் ஒரு நிமிஷத்தில் பாழாய் போவார்கள் என்பதையும் நாம் காணலாம். நாம் வாழுகிற இக்காலத்திலும் துன்மார்க்கமாய் ஜீவித்த மக்களின் பரிதாப முடிவை நாம் கண் கூடாக காண்கிறோம். அவர்களுடைய செல்வமோ, பதவியோ, பட்டமோ, அழகோ, உடல் பலமோ அவர்களுக்கு உதவாமற் போய் அழிந்துபோவதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், சில துன்மார்க்கரை அவர்கள் மரணத்திற்கு பிறகு நியாயந்தீர்க்க அவர்களை தேவன் விட்டுவைத்திருக்கிறார். இதுவே லாசரு-ஐசுவரியவான் வாழ்க்கையில் நடந்தது. எனவே, தேவனையே சார்ந்திருக்கும் ஒரு தேவ பிள்ளை எந்நிலையில் இருந்தாலும், அவனை இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் பாதுகாத்து வழிநடத்த தேவன் வல்லவராயிருக்கிறார். அதனால்தான் சங்கீதம் 73:23,24 வசனங்களில் **"ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்"** என்று ஆசாப் கூறுகிறார்.

மேலும் **"இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்"** என்றும் சங்கீதம் 73:27,28 வசனங்களில் கூறுகிறார். எனவே, ஒரு தேவ பிள்ளை இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும், தேவனை அண்டி வாழ்வதே (சார்ந்து வாழ்வதே) நலமான ஒன்றாகும். மேலும், ஒரு தேவ பிள்ளை அனுபவிக்கும் "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" **(ரோ 8:18)** என்று வேதம் கூறுகிறது. மேலும் **"உத்தமனுக்குக் கர்த்தர் துணை" (II நாளா 19:11)** என்றும், **" நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்" (சங் 37:37)** என்றும் வேதம் கூறுகிறது.

மேலும் **"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசா 26:3)** என்றும் வேதம் கூறுகிறது. எனவே இவ்வுலக மக்களின் போக்கை பாராமல், தேவனையே நோக்கிப் பார்த்து, அவரையே சார்ந்திருந்து, நம் வாழ்க்கையை நடத்துவோமானால், இம்மைக்கும், மறுமைக்கும் வேண்டிய சகலவற்றையும் தேவன் நமக்கு தந்தருளுவார். அவருக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்.

# கிறிஸ்துவைப்போல




இவ்வுலகில் வாழும் நம் ஒவ்வொருவரின் நோக்கமும் நாம் கிறிஸ்துவைப்போல மாற வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய், திட்டமாய் இருக்கிறது. நம் ஆதி பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் இழந்து போன தேவ சாயலை, தேவ மகிமையை, நாம் மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய அநாதி திட்டமாய் இருக்கிறது. நாம் எவ்வளவுதான் பரிசுத்தமாய் வாழ முயற்சித்தாலும், நீதியாய் வாழ முயற்சித்தாலும் நாம் கிறிஸ்துவைப்போல மாற, வாழ முயற்சிக்காவிடில் ஒரு பலனும் இல்லை. ஏனெனில் நம்மில் உள்ள அநேகர் தங்கள் சுய நீதியை, பரிசுத்தத்தை சார்ந்திருந்தும் அதனால் அவர்களுக்கு தேவனிடத்தில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்களிடம் தேவ சுபாவங்கள், தேவ மகிமைகள் வெளிப்பட்டது. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார், மோசேயின் முகம் தேவ மகிமையால் பிரகாசித்தது. ஆவியானவர் அவர்களின் மூலமாய் சில குறிப்பிட்ட கிரியைகளை நடப்பிக்க அவர்கள் மேல் வந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதோ ஏதோ ஒரு காரியத்தை நடப்பிக்க அல்ல, நம்மில் கிறிஸ்துவை உருவாக்கி, அவரைப்போல் நம்மை மாற்றி, முடிவில் அவர் வரும்போது, மகிமை அடைந்த சரீரத்தை நாம் பெற்றுக்கொள்ளும்படியாய் நம்மை ஆயத்தப்படுத்தவே.

கிறிஸ்துவைப்போல மாறுவது என்றால், கிறிஸ்துவின் சிந்தை, கிறிஸ்துவின் சுபாவங்கள் நம்மில் வெளிப்பட வேண்டும். பவுல் அப்போஸ்தலன் இதை சொல்லும்பொழுது, **"ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" (II கொ 4:16)**. மேலும் அவரால் **"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (I கொ 11:1)** என்று தைரியமாய் கூற முடிந்தது.

ஆனால் ஒரு பக்கம் ஆவியானவர் நாம் கிறிஸ்துவில் வளர உந்திக்கொண்டிருக்கும் போது, அதற்கு விரோதமாய் நமது மாம்சமும், மனதும் போராடுகிறது. ஏவாள் கனியை கண்டபோது அது **"புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு" (ஆதி 3:6)** தன்னுடைய மாம்சமும், மனமும் விரும்பினதை செய்து, தேவ மகிமையை இழந்துபோனாள். இன்று நாமும் அதேபோல் மாம்சத்தோடும், மனதோடும் போராடிகொண்டுக்கிறோம். இதை பவுல் கூறும்பொழுது **"அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை" (ரோ 7:18)** என்கிறார்.

ஆனால் நாம் கிறிஸ்துவுக்கும், ஆவியானவருக்கும் நம்மை ஒப்புக்கொடுக்கும் பொழுது, கிறிஸ்துவே நம்மில் இருக்கும் மாம்சத்தின் கிரியைகளை அகற்றிவிடுவார். ஏனெனில் வேதம் கூறுகிறது **"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா 5:24)** என்று. நம்மில் இருக்கும் மாம்ச கிரியைகளை அழிப்பது மாத்திரமல்ல, நாம் அவரை போல மாற, நம்மை அவரோடு இணைத்துக்கொள்கிறார். **யோவான் 15:5** இல் ஆண்டவர் கூறுகிறார் **"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது"** என்றார். இதுவே நாம் முழுவதும் தேவனால்

நடத்தப்படுகிற அனுபவமாகும். ஏனெனில் அவரால் அன்றி நம்மால் ஒன்றும் செய்யக்கூடாது. மேலும் பவுல் அப்போஸ்தலன் **ரோமர் 11:17** வசனத்தில் நாம் ஒலிவமரமாகிய கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, அவருடைய வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருக்கிறோம் என்று கூறுகிறார்.

அப்போஸ்தலர் நடபடிகளில் ஸ்தேவானைப் பற்றி பார்க்கிறோம். **அப்போஸ்தலர் 6:5** கூறுகிறது அவர் விசுவாசத்தாலும் பரிசுத்த ஆவியானவராலும் நிறைந்திருந்தார் என்று. மேலும் **அப்போஸ்தலர் 6:8** கூறுகிறது **"ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்"** என்று. மேலும் **அப்போஸ்தலர் 6:10** கூறுகிறது **"அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று"** என்று. இதன்மூலம் அவர் முழுவதும் தேவ ஆவியால் நிறைந்து, தேவ வல்லமையை, சித்தத்தை தன் வாழ்வில் வெளிப்படுத்துகிறவராய் இருந்தார் என்று நாம் காண்கிறோம்.

இதனால் அவர் முகம் தேவதூதன் முகம் போல் பிரகாசமாய் இருந்தது **(அப் 6:15)**. ஆதலால் அவர் கைது செய்யப்பட்டு ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக நிறுத்தப்பட்டபொழுதும் தைரியமாய் கிறிஸ்துவை பிரசங்கித்தார். **அப்போஸ்தலர் 7:54-60** வசனங்கள் கூறுகிறது **"இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். அவன் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய**

**இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்”**.

இங்கு நாம் காண்கிறபடி ஸ்தேவானின் செயல், பேச்சு எல்லாம் தேவ ஆவியால் நடத்தப்படுகிறதையும், ஆனால் மற்ற மனிதர்களின் செயலோ அவர்கள் மாம்சமும், மனதும் என்ன சொல்கிறதோ அதற்கு ஏற்றார் போலவும் காணப்படுகிறது. தேவ ஆவியினால் நடத்தப்பட்ட ஸ்தேவனால் மகிமையான காரியங்களை காணமுடிந்தது. கிறிஸ்துவை போலவே ஜெபிக்கவும், தன் ஆவியை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவும் முடிந்தது. அவனை வரவேற்க கிறிஸ்து ஆயத்தமாய் இருப்பதை நாம் காணலாம். நாமும் ஸ்தேவானை போல கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாய், பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவில் வளருவோமானால், நமக்கு எதிராக போரடுகிற எந்த மாம்ச வல்லமையையும் நம்மால் மேற்க்கொள்ளமுடியும், ஒன்றும் நம்மை சேதப்படுத்த முடியாது.

அதுமாத்திரமல்ல ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலிருந்தது போல, அவனை வரவேற்க கிறிஸ்து ஆயத்தமாயிருந்தது போல, நம்முடைய சரீரமும் மகிமையடைந்த சரீரமாய் மாற்றப்பட்டு, மத்திய ஆகாயத்தில் கிறிஸ்து நமக்காய் எதிர்கொண்டு வருவார், நாமும் அவரிடத்தில் சேர்க்கப்படுவோம். கிறிஸ்துவும் இதற்காகவே பிதாவிடம் வேண்டினார். **யோவான்** 17:21 கூறுகிறது **“நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்”** என்றார். மேலும் **ரோமர்** 12:5 கூறுகிறது நாம் **“கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்”** என்று.

மேலும் **I கொ** 3:16 கூறுகிறது **“ நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?”** என்று. மேலும்

பவுல் **எபேசியர் 5:30-32** வசனங்களில் **"நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன்"** என்றார்.

எனவே நமது மாம்சத்தையும், மனதையும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருக்கு கிழ்படிந்து இருக்க வேண்டும். அப்பொழுது நாம் அவரில் ஒரு அங்கமாய் இருப்போம். அவரும் நம்மில் நிறைந்திருப்பார். ஏனெனில் **எபேசியர் 5:26,27** வசனங்கள் கூறுகிறது **"தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்"**.

எனவே கிறிஸ்து தம்மை பலியாக ஒப்புக்கொடுத்ததே, நம்மை அவரைப் போல் மாற்றி, ஆதாம் ஏவாள் இழந்துபோன தேவ மகிமையை நமக்கு மறுபடியும் அளித்து, தம்மோடு நம்மை சேர்த்துக்கொள்வதற்கே. மேலும் **"நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும்" (எபே 4:11)** என்று பவுல் கூறுகிறபடி, நாம் ஒவ்வொரு நாளும் பூரணத்தை நோக்கி வளருகிறவர்களாய் இருக்க வேண்டும்.

அப்பொழுது ஒரு நாள், கிறிஸ்து வரும்போது **"கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும்**

**தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்" (I கொ 15:51-54)**. அப்பொழுது **"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (I கொ 15:55)** என்று நாம் முழுங்குவோம். **"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (I கொ 15:57)**. **"கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளி 22:20)** ஆமென், அல்லேலூயா.

.

# தேவ கிருபை

## (வேத தியானம் லூக்கா 15:11-32)



மேற்க்கண்ட வேத பகுதியை நாம் தியானிக்கும் பொழுது, மனம் திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் தேவன் எவ்வளவாய் மகிழுகிறார் என்பதையும், ஒவ்வொரு மனிதனும் அவருடைய பிள்ளையாய் அவரிடத்தில் வரவேண்டும் என்பதிலும் எவ்வளவு கரிசையாய் இருக்கிறார் என்பதையும் நாம் காணலாம். ஆண்டவர் இந்த சம்பவத்தை கூறுவதற்கு முன்பு காணாமற்போன ஒரு ஆட்டிற்காக மேய்ப்பன் எவ்வளவு கரிசனையாய் இருக்கிறான் என்பதை பற்றியும், காணாமற்போன ஒரு வெள்ளிக்காசை ஜாக்கிரதையாய் தேடி கண்டுபிடித்த ஸ்திரீயை குறித்தும் கூறுகிறார்.

இங்கு ஆண்டவரும், பரலோகமும், அதிலுள்ள தூதர்களும் மகிழுகிற ஒரு காரியம் உண்டென்றால் அது பாவத்தில் வாழ்ந்த ஒரு மனிதன் மனதிரும்பி அவருடைய இராஜ்யத்திற்கு திரும்புவதே ஆகும். இந்த வேத பகுதியில் மனதிரும்பி வந்த மகனை பற்றி மட்டும் அல்லாமல், தகப்பனுடைய தோட்டத்தில் வேலைச்செய்து அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து இருந்த மூத்த குமாரனை குறித்தும் நாம் காண்கிறோம். இந்த மகன், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவருடைய பணியை செய்யும் தேவ பிள்ளைக்கு

ஒப்பாய் இருக்கிறான். இவர்கள் இருவர் இடையேயும் விளங்கிய தேவ கிருபையை குறித்து நாம் இப்பொழுது தியானிப்போம்.

முதலாவது மூத்த குமாரனுக்கும், இளைய குமாரனுக்கும் இடையே இருந்த வேற்றுமையான குணாதிசயங்களை நாம் காணலாம். இருவரும் தகப்பனுடைய ஆஸ்திக்கு பங்குள்ளவர்களாய் இருந்தனர். இருவரும் அதின் மேல் உரிமை பாராட்டவும் அதை பயன்படுத்தவும் விரும்பினர். ஆனால் அதை அவர்கள் செய்த விதத்தில் தான் வித்தியாசம் இருந்த்து. மூத்த குமாரன் தகப்பனுடைய வயலில் வேலைச் செய்தான் (லூக் 15:25). தகப்பன் தனக்கு கொடுத்த ஆஸ்தியை பெருகச் செய்ய நினைத்தான். அதுமாத்திரமல்ல அதற்காக தகப்பனுடைய ஆலோசனையை பெற்று அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருந்தான் (லூக் 15:29). தனக்கு தகப்பன் தந்த ஆசிர்வாதங்கள் பலுகி பெருகி அது மற்றவருக்கும் ஆசிர்வாதமாய் இருக்க வேண்டும் என்று எண்ணினான். எல்லாவற்றிற்கும் மேலாக தகப்பனோடு இருந்து அதை அநுபவிக்க அவன் விரும்பினான்.

இதைப்போல், ஒரு தேவ பிள்ளையும் தேவன் தனக்கு தந்த தாலந்துகளை அவருக்காக பயன்படுத்தி தேவ இராஜ்யம் (தகப்பனுடைய வயல்) விருத்தியடையும் படியாய் உழைக்கிறான். அதன் மூலம் தான் தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டவனாய் (தகப்பனுடைய ஆஸ்தியை உடையவன்) மாத்திரமல்ல, தான் ஆசிர்வாதமாய் மற்றவருக்கும் இருக்கிறான். மேலும் அவன் தேவனோடு இருக்கிறான். இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம், தேவனுடைய ஆசிர்வாதங்கள், அவர் நமக்கு தரும் தாலந்துகள் இவை எல்லாவற்றையும் விட தேவ ஐக்கியமே ஒரு தேவ பிள்ளைக்கு தேவையான ஒன்றாகும். தேவ ஐக்கியம் இல்லாமல் தேவன் தந்த ஆசிர்வாதத்தால் மாத்திரம் ஒரு மனிதன் நீண்ட காலம் மகிழ்ச்சியாய், ஆசிர்வாதமாய் வாழமுடியாது.

இதையே நாம் இளைய குமாரனிடத்தில் காண்கிறோம். அவனும் தகப்பனுடைய ஆசிர்வாதங்களை அநுபவிக்க (பயன்படுத்த) விரும்பினான். ஆனால் தகப்பனுடைய ஐக்கியத்தையோ, அவனுடைய ஆலோசனையையோ அவன் தேடவில்லை. தன் சுய பெலத்தால், சுய ஞானத்தால் அவற்றை உபயோகிக்க நினைத்தான். இதனால் அவன் தகப்பனை விட்டு பிரிந்தான்.

இங்கு நாம் காண்கிறது என்னவென்றால், ஆண்டவர் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய ஆசிர்வாதங்களை, நன்மைகளை, தாலந்துகளை தருகிறார். கடவுள் எனக்கு இவ்வுலகத்தில் ஒன்றையும் தரவில்லை என்று ஒரு மனிதனும் கூற முடியாது. ஆனால் அதை எவ்வாறு ஒரு மனிதன் பயன்படுத்துகிறான் என்பதையே தேவன் பார்க்கிறார். மேலும் தேவனுடைய ஐசுவரியங்கள் பூரணமான ஒன்றாகும். எத்தனை மனிதருக்கும், எவ்வளவு வேண்டுமானாலும் அவரால் கொடுத்துக் கொண்டே இருக்க முடியும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவர், அவனுடைய வாழ்க்கையில் தந்திருக்கும் ஒவ்வொரு ஆசிர்வாதத்திற்கும், தாலந்திருக்கும் மனிதன் எந்த வகையிலும் தகுதியானவன் அல்ல. ஆனால் தேவன் தம்முடைய சாயலில் அவனை சிருஷ்டித்தபடியால், தம்முடைய ஆசிர்வாதத்திற்கு (ஆஸ்திக்கு) அவன் சதந்தரவாளியாய் (உரிமையானவனாய்) இருக்கிறான் என்பதை வெளிப்படுத்த அவற்றை கொடுக்கிறார். தேவன் தந்த ஞானத்தினால் தான் மனிதன் இப்பூமியில் இத்தனை பெரிய காரியங்களை செய்திருக்கிறான். அது அவனுக்கும், மற்ற மனிதருக்கும் ஆசிர்வாதமாய் இப்பூமியில் காணப்படுகிறது.

தகப்பனை விட்டு பிரிந்து சென்ற இளையக்குமாரன் எல்லாவற்றையும் தந்த சொந்த வழியிலேயே செலவழித்தான். தன் தகப்பனுடைய சொத்து (தேவ ஆசிர்வாதங்கள்) முழுவதையும் இழந்தான். இப்பொழுது அவன் நம்பி இருந்த உலகம், தன்னுடைய ஆசிர்வாதங்களை எல்லாம் வீணாய் செலவழித்த இந்த உலகம் அவனுடைய வாழ்க்கையை கசப்பாக்கிற்று.

**"தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்" (லூக் 15:14,15).** இங்கு அவன் பார்வைக்கு சுகமாய், சுதந்தரமாய் காணப்பட்ட உலகம், அவனுக்கு குறைவுண்டாக்கிறதாய் காணப்பட்டது. தகப்பனுடைய பரிபூரண ஆசிர்வாதத்தினால் நிறைந்திருந்த அவன் இப்பொழுது அந்த தேசத்தில் (தகப்பன் இல்லாத தேசம்) குறைவுப்பட தொடங்கினான்.

ஒருவேளை இப்பொழுது அவனுக்கு புத்தி தெளிந்திருந்தால், அவன் தன் தகப்பன் வீட்டிற்கு திரும்பி இருக்கலாம். ஆனால் தகப்பனுடைய ஆஸ்தியை

இழந்த அவன், தன் சுயபெலத்தால் எப்படியாவது அந்த தேசத்தில் (மாம்ச உலகத்தில்) யாரையாவது அண்டி வாழ்ந்து விடலாம் என்று எண்ணினான். அவனுக்கும் ஒரு இடம் கிடைத்தது. ஆனால் அது அவன் வாழ்வை அர்த்த மற்றதாக்கிற்று. தகப்பனுடைய ஆஸ்திக்குரியவனாய் வாழ்ந்த அவன், இப்பொழுது பன்றிகளோடு நாற்றத்தில் வாழ வேண்டியிருக்கிறது. இதுவே தகப்பனை (தேவனை) விட்டு பிரிந்து இந்த உலகத்தோடு வாழ விரும்பும் ஒருவனுடைய முடிவு.

மேலும் **"அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை" (லூக் 15:16).** இதுவே உலகத்தோடு வாழ்பவனின் மிகவும் மோசமாகவும் நிலையாகும். தகப்பன் (தேவன்) தந்த அந்தஸ்தோடு, ஐசுவரியத்தோடு வாழ்ந்தவன், இப்பொழுது எல்லாவற்றையும் இழந்து தரங்கெட்ட ஒரு வாழ்க்கையை வாழுகிறான். வாழ்க்கையின் மிக தாழ்வான ஒரு பகுதியில் உதவி செய்யவோ, ஆறுதல் கூறவோ யாரும் அற்ற நிலையில் இருந்த **"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்" (லூக் 15:17-20).**

இங்கு அவன் தன் தகப்பனிடத்தில் திரும்ப தன் இருதயத்தை திருப்பினாலும், அவன் தன் பாவத்தின் அகோரத்தின் நிமித்தம் தன் தகப்பனுடைய ஐக்கியத்தை பெற தான் தகுதியற்றன் என்ற மனநிலையோடு இருக்கிறான். பாவத்தில் வாழ்ந்த நாமும், தேவனால் மீட்கப்பட்ட பொழுது, அவருக்கே கீழ்ப்படிகிற அடிமைகளாக நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் அவருக்கே ஒப்புகொடுத்தோம். ஆனால் தேவனோ எதிர்ப்பார்பதெல்லாம் நாம் பாவத்திற்கு விலகி அவருக்கு பயந்து இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் அவரோடு ஐக்கியமாயிருக்க வேண்டும், அவரோடு உறவாட வேண்டும் என்பதே.

தேவன் தூதர்களை தமக்கு பணிவிடை ஆவிகளாக உருவாக்கினார். ஆனால் மனிதனையோ தமது சாயலில், தமது ரூபத்தில், தம்மோடு உறவாடும்படியாய் உண்டாக்கினார். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று புத்தி தெளிந்தபோது, எழுந்து புறப்பட்டு என்கிற வார்த்தைகளாகும். தேவன் அவனுக்கு மனந்திரும்ப ஒரு வாய்ப்பை கொடுத்த பொழுது (புத்தி தெளிந்தபோது), அவன் தான் இருக்கும் இடத்தை விட்டு எழுந்து புறப்பட்டான். பாவியான ஒரு மனிதன் பாவ சேற்றில் உழன்றுக் கொண்டிருக்கும்போது, தேவன் ஏதோ ஒரு விதத்தில் மனந்திரும்ப ஒரு வாயப்பை தருகிறார். அதை பயன்படுத்தம் பொழுது மட்டுமே தேவன் கிரியை செய்ய முடியும். இதுவே பேதுரு மற்றும் யூதாஸின் வாழ்வில் நிகழ்ந்தது.

தன் இடத்தை விட்டு எழுந்து புறப்பட்ட இளையக்குமாரன் தகப்பனிடத்தில் வந்தான். **"அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்" (லூக் 15:20).** இங்கு அவன் தகப்பனுடைய பார்வையில் பட்டவுடனே (அவனுடைய எல்லைக்குள் வந்தவுடனே), தகப்பன் ஓடிச்சென்று அவனை அரவணைத்துக்கொள்கிறான். இதுவே மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் (தேவனிடத்தில்) உண்டாகும் ஒரு சந்தோஷமாகும். இங்கு தேவன் நியாயாதிபதியாய் நின்று கொண்டு நம் பாவத்தை மன்னித்து நம்மை தம்மோடு சேர்த்து கொள்பவராய் மட்டுமல்ல, நாம் மனந்திரும்பி தம்மிடம் வரவேண்டும் என்று மிகுந்த ஆவல் உள்ளவராய் நமக்காய் காத்துக்கொண்டிருக்கிறார். அதற்காகவே **"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோ 3:16).**

பரலோகத்தில் எவ்வளவோ தேவதூதர்களும், பரிசுத்தவாங்களும் இருந்தாலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது (லூக் 15:7). இதைப்போல் தேவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் வரவேண்டும் என்றே எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார். அதனாலேயே தேவன் கிருபையின் காலமாகிய இக்காலத்தை இம்மட்டும் வைத்திருக்கிறார். ஆகிலும் அதற்கு ஒரு முடிவு

உண்டு. அதற்கு முன்பாக எழுந்து புறப்பட்டு ஆண்டவரிடம் வந்து விடவேண்டும்.

மேலும் **"குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான்" (லூக் 15:21).** இங்கு இளையக்குமாரன் தான் செய்த காரியங்கள் தன் தகப்பனுக்கு விரோதமானது மட்டுமல்ல அது தேவனுக்கு விரோதமானது என்பதையும் அறிக்கையிட்டான். பாவத்தில் இருந்து இரட்சிப்பை பெற நினைப்பவனும் தன் பாவத்தால் தான் அழிவது மாத்திரமல்ல, அது தேவனுக்கு விரோதமானது, தேவனை வருத்தப்படுத்தக்கூடியது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும், அறிக்கையிட வேண்டும்.

**"அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்.**
**கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்" (லூக் 15:22-24).** இங்கு இளையக்குமாரன் தகப்பனுடைய மன்னிப்பை பெற்று, அவரது அடைக்கலத்திற்குள் தனக்கு ஒரு இடம் கிடைத்தால் போதும் என்று எண்ணினான். ஆனால் தகப்பனோ அவனுக்கு, அவன் இழந்து போன மகிமையை (தன் குமாரன் என்ற அந்தஸ்தை) மறுபடியும் தருகிறார். இதைப் போலவே தேவன் ஒரு பாவியை மன்னித்து சேர்த்து கொள்ளும் பொழுது, அவனை வெறும் நியாயாதிபதியை போல மன்னித்து சேர்த்துக்கொள்ளாமல், தகப்பனாய் அவனை அரவணைத்து சேர்த்துக்கொள்கிறார். பாவ மன்னிப்பை பெற்ற மனிதனின் உள்ளத்தில் உண்டாகும் சந்தோஷத்தை பார்க்கிலும், பாவியை மன்னித்து பாவத்தை நீக்கிப்போட்ட தேவனே அவனிலும் அதிகமாய் மகிழுகிறார். நாம் தேவனோடு ஐக்கியமாய் இருக்க விரும்புவதை காட்டிலும், அவர் நம்மோடு ஐக்கியமாய் இருக்க அதிகம் விரும்புகிறார்.

இவ்வுலக காரியங்களில் நம் மனதை செலுத்தி அல்லது சக மனிதர்களோடு நேரத்தை செலவிட்டு அவரை நினையாமல் சில வேளைகளில் நாம் இருந்தாலும், அவரோ எப்பொழுதும் எல்லா வேளையிலும் நம் மேல் நினைவாய் இருக்கிறார். ஏனெனில் வேதம் கூறுகிறது **" அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப்போ 17:28)** என்று. நம்மை தம்மோடு சேர்த்து கொள்வது மாத்திரமல்ல ஆதியில் நம் முற்பிதாக்களான ஆதாம், ஏவாள் இழந்து போன தேவ மகிமையை நமக்கு திரும்பவும் அளிக்கிறார். இவற்றால் தேவ கிருபை எவ்வாறு நம் மேல் பொழியப்படுகிறது என்பதை நாம் உணர்ந்துக்கொள்ளலாம்.

இப்பொழுது மூத்த குமாரனை குறித்து தியானிப்போம். ஒரு புறத்தில் பாவத்தில் வாழ்ந்து தேவ கிருபையை உணராமல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னொரு புறத்தில் தேவனோடு வாழ்ந்தும், தேவ வார்த்தைகளுக்கு கீழ்படிந்திருந்தும், தேவ கிருபையை பலர் இன்னும் சரியாய் விளங்கி கொள்ளவில்லை. அதையே மூத்த குமாரனின் வாழ்க்கையில் காண்கிறோம். **லூக் 15:25-28 வசனங்களில் "அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு; ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து: இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன்: உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்".** இங்கு நாம் காண்கிறபடி மூத்தகுமாரன் தகப்பனின் வயலில் தகப்பனுக்காக வேலைச்செய்தான். தகப்பனுக்கு கீழ்படிந்து தகப்பனோடிருந்தான். தான் தகப்பனுக்கு கீழ்படிந்து இருப்பதால் தன்னை மாத்திரமே தகப்பன் நேசிப்பார் என்று எண்ணினான். தன் கிரியைகளின் நிமித்தமே தகப்பன் தன்னை நேசிக்கிறார் என்றும், தன் தமையன் (இளையக்குமாரன்) தகப்பனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்கிறபடியால் தகப்பன் அவனை வெறுக்கிறார் என்றும் நினைத்தான்.

இப்படியே நாமும், பல வேளைகளில் நம்முடைய பயபக்தியான வாழ்க்கையினால்தான் தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும், அப்படி

பயபக்தியில்லாதவர்கள் தேவ அன்பை பெற பாத்திரவான்கள் அல்ல என்றும், எனவே நாமே தேவ பார்வையில் உயர்ந்தவர்கள் என்றும் எண்ணிக்கொள்கிறோம். ஆனால் தேவன் நம்மை எப்படி நேசிக்கின்றாரோ அப்படியே எந்த மனிதனையும், அவன் எந்நிலையில் இருந்தாலும், அவனை அவ்வாறே நேசிக்கிறார். ஏனெனில் அவரே நம் அனைவரையும் சிருஷ்டித்தவர். அவரே நம்முடைய தகப்பன். இதை உணராத மூத்தக்குமாரன் கோபமடைந்து, தகப்பனிடத்தில் செல்ல மனதில்லாதிருக்கிறான். ஆனால் **"தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்" (லூக் 15:28).** இதுவே தேவனுக்கு கீழ்படிந்து இருக்கும் ஒரு தேவபிள்ளையின் மேன்மையாகும். சில வேளைகளில் வாழ்க்கையில் உண்டாகும் வேதனைகளினால், இழப்புக்களினால் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் நாம் சோர்ந்து போகும்பொழுது, தேவனை நோக்கி பார்க்க முடியாத பொழுதும், தேவனே நம்மை தேடி வந்து ஆறுதல்படுத்துகிறார். நம்மை விடுவிக்கிறார். இதுவே இளையக்குமாரனுக்கும், மூத்தக்குமாரனுக்கும் உள்ள வித்தியாசம், இளையக்குமாரன் பாடுகள் பட்டு வேதனை அடைந்தாலும், அவன் புத்தி தெளிந்து தகப்பனிடம் வந்தபொழுதே தகப்பன் அவனை சந்தித்து ஆறுதல்படுத்தி உயர்த்தினார். ஆனால் ஒரு தேவபிள்ளையோ, தேவனுடைய பார்வையில் எப்பொழுதும் இருக்கிறபடியால், அவனுக்கு ஒரு தீமையும் அணுகாமல் பாதுகாக்கிறார். அவன் அவரை நோக்கி பார்க்க முடியாதபடி துயரத்தில் இருந்தாலும் அவர் அவனை தேடி வருகிறார்.

மேலும் **லூக் 15:29,30 வசனங்களில் "அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்".** இங்கு மூத்தக்குமாரன் தன்னுடைய நீதியை வெளிப்படுத்துவதை காணலாம். தான் நீதிமானாய் வாழ்வதாகவும், தன்னுடைய தமையனோ பாவத்தில் வாழ்வதாகவும், ஆனால் அவனுக்கு கிடைத்த ஆசிர்வாதங்கள் கூட தனக்கு கிடைக்கவில்லை என்று தகப்பனிடத்தில் முறையிட்டான். நாமும் இப்படியே

தேவனிடத்தில் சில வேளைகளில் நமக்கு நியாயமாய் கிடைக்க வேண்டிய ஆசிர்வாதங்கள் கூட கிடைக்காத போது, அதே வேளையில் இவ்வுலகத்திற்க்கேற்றார் போல் வாழும் மக்களுக்கு எந்தவித தடையும் இன்றி ஆசிர்வாதங்கள் கிடைக்கும் பொழுது முறுமுறுக்கிறோம்.

ஆனால் அதற்கு தகப்பனுடைய பதிலோ **"மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது" (லூக் 15:31)** என்பதாகும். ஆம், தேவனும் இதையே நம்மிடம் கூறுகிறார். அவருடையதெல்லாம் நம்முடையதாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மை எஜமானாக, இராஜாவாக வெளிப்படுத்தினார். ஆனால் புதிய ஏற்பாட்டில் அவர் நம்முடைய தகப்பனாய் இருக்கிறார். நம்முடைய உலக பிரகாரமான எஜமானும், இராஜாவும் நமக்கு தேவையானதை எல்லாவற்றையும் தரலாம். ஆனால் எஜமானுடைய, இராஜாவுடைய ஆஸ்தியின் மேல் நாம் உரிமை பாராட்டமுடியாது. ஆனால் தகப்பன் நமக்கு கொடுக்கும் ஆசிர்வாதங்கள் மாத்திரமல்ல, தகப்பனுக்குரியது அனைத்தும் நமக்குரியதாயிருக்கிறது. எனவே தேவனிடத்தில் இருந்து ஏதோ சில ஆசிர்வாதங்களை மாத்திரம் நாம் பெறுவதோ, உரிமை பாராட்டுவதோ அல்ல, தேவனுடைய அனைத்து ஆசிர்வாதங்களும், அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்கு உரியதயிருக்கிறது.

இதற்கும் மேலாக **"நீ எப்போதும் என்னோடிருக்கிறாய்" (லூக் 15:31)** என்று தகப்பன் கூறியது போல, நாம் தேவனோடும், அவர் நம்மோடும் இருக்கிறார். இதுவே நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் அநுபவம். இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் எல்லாம் என்ற நிலையாகும். அவருடைய அச்சையடையளங்கள் நம்மில் காணப்படுகிற வாழ்க்கையாகும். அவர் தலையாய் நாம் ஒவ்வொருவரும் அவயவங்களாய் காணப்படுகிற அநுபவமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக தனிப்பட்ட முறையில் நாம் தேவனோடு கொள்கிற ஐக்கியமும், வாழ்கையில் ஒவ்வொரு நொடிபொழுதும் அவர் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயமும், அவர் நமக்கு தரும் எல்லா ஆசிர்வாதங்களிலும் மேலானதாகும். இதையே தகப்பனும் மூத்தக்குமாரனுக்கு எடுத்துக் கூறினான்.

மேலும் இறுதியாக **"உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே என்று சொன்னான்" (லூக் 15:32).** இங்கு தகப்பன் இளையக்குமாரன் தீய வழியில் சென்றிருந்தாலும், அவன் மூத்தக்குமாரனின் சகோதரன் என்பதையும், அவன் மீண்டும் தகப்பனிடம் வந்தது தனக்கு மாத்திரமல்ல மூத்தக்குமாரனாகிய அவனுக்கும் மகிழ்ச்சியான செய்தியே என்றும், தகப்பனுக்கு குமாரர்கள் செய்யும் பணிவிடையைக்காட்டிலும், அவர்கள் இருவருடைய ஐக்கியத்தையும், சகோதரர் மத்தியிலே ஐக்கியத்தையுமே தான் விரும்புவதாகவும், தனக்கு மிகுந்த சந்தோஷத்தை தருவதும் அதுவே என்பதை வெளிப்படுத்துகிறார்.

தேவனும் இதையே நம்மிடம் கூறுகிறார். நாம் அவருக்கு எவ்வளவு பிரயோஜனமானவர்கள் என்பதையோ, மற்ற மனிதர்களின் வாழ்க்கையால் அவருடைய நாமம் எப்படி மகிமைபடுகிறது என்பதை காட்டிலும், ஒவ்வொருவரும் மனந்திரும்பி உண்மையான தேவனுடைய அன்பை உணர்ந்து அவரோடு ஐக்கியமாய் இருப்பதையே அவர் மிகவும் விரும்புகிறார், அதுவே அவருக்கு மிகுந்த சந்தோஷத்தை தருகிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

மேலும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் ஒவ்வொருவரும் சகோதரரே என்பதையும், எனவே ஒவ்வொருவரும் மனந்திரும்பி தேவனிடம் வரவேண்டும் என்பதே ஒரு தேவபிள்ளையின் வாஞ்சையாய் இருக்க வேண்டும் என்பதும், அவ்வாறு சக மனிதர்களை தேவனிடத்தில் வழிநடத்துவதே நாம் தேவனுக்கு செய்யும் மேலான ஊழியம் என்றும், அதுவே அவரையும், நம்மையும், மற்றெல்லாரையும், தேவதூதரையும், பரலோகத்தையும் சந்தோஷப்படுத்தும் என்றும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இச்சம்பவத்தை நமக்கு வேதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு ஆண்டவர் கூறிய ஒவ்வொரு காரியத்தையும் எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் (யோ 21:25) ஆமென்.

# சோர்ந்து போகிறவனுக்கு



**“சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து” (ஏசா 40:29).**

மேற்க்கண்ட வேத வசனத்தில், சோர்ந்து போகிறவனுக்கு என்ற வார்த்தை அவன் ஏற்கெனவே சோர்ந்து போன நிலையில் தற்போது உள்ளான் என்பதை வெளிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட ஒரு மனிதனுக்கு கர்த்தர் பெலன் கொடுக்கிறார்.

இங்கு நாம் காண்கிறபடி, ஒருவன் சோர்ந்து போனதால் தேவன் அவனை தள்ளிவிடுகிறதில்லை. பெரும்பாலும் நமக்கு விசுவாச பரீட்சை ஏற்படும்பொழுது, போராட்டங்களை நம்மால் தாங்கி கொள்ள முடியாது என்று நமக்கு தோன்றுகிறபோது, அல்லது அடியின் மேல் அடி விழும்பொழுது, நாம் எப்பேற்பட்ட விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தாலும் சோர்ந்து போகிறோம்.

வேதத்தில் உள்ள அநேக பரிசுத்தவாங்களும் இப்படிப்பட்ட வேளைகளுக்குள் கடந்து சென்றிருக்கின்றனர். 1 இரா 19:1-5 வசனங்களில் “எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும், ஆகாப்

யேசபேலுக்கு அறிவித்தான். அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களில் ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால், தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச்சொன்னாள். அவனுக்கு அது தெரிந்தபோது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்சேர்ந்த பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்".

இங்கு நாம் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டி "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1 இரா 17:1) என்று ஆகாப் இராஜாவுக்கு முன்பாக முழங்கின எலியா தீர்க்கதரிசி, சகல இஸ்ரவேலர் முன்பும் பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசிகளின் முன்பும், வானத்திலிருந்து அக்கினி இறங்கி தன்னுடைய பலியை தேவன் அங்கிகரித்ததின் மூலம், "கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்" (1 இரா 18:39) என்று இஸ்ரவேல் மக்களை முகங்குப்புற விழவைத்து, பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசி,களை வெட்டிப் போட்டு, தேவ வல்லமையை தன் வாழ்க்கையில் வெளிக்காட்டிய எலியா தீர்க்கதரிசி, தேவனால் அற்புதவிதமாய் போஷிக்கப்பட்டு (1 இரா 17:6,16), மரித்துபோன விதவையின் மகனை உயிரோடு எழுப்பிய எலியா தீர்க்கதரிசி (1 இரா 17:21,22), இப்பொழுது ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி, போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொன்னார்.

ஒரு பக்கம் விசுவாசத்தினால் அற்புதமான காரியங்களை செய்த எலியா தீர்க்கதரிசி இங்கு தான் சாக வேண்டும் என்று கூறுவதையும், தான்

நல்லவன் அல்ல என்று கூறுவதையும் நாம் பார்க்கும்பொழுது, அவர் எவ்வளவாய் சோர்ந்து போய் இருந்தால் அவர் இவ்வாறு கூறமுடியும் என்பதை நிதானித்துக் கொள்ளலாம். ஆனால் இங்கு நாம் காண்கிற சோர்வு தேவன் மேல் அவர் வைத்திருந்த விசுவாசத்திலும், அன்பிலும் உண்டான தளர்வினால் ஏற்பட்ட ஒன்றல்ல. அல்லது சூழ்நிலையை குறித்த பயத்தினாலோ, மனுஷரை (ஆகாப், யோசபேல்) குறித்த பயத்தினாலோ உண்டானதல்ல.

இங்கு நாம் காண்கிற எலியாவின் சோர்விற்கு காரணத்தை அவரே தேவனிடம் 1 இரா 19:10,14 ஆகிய வசனங்களில் இருமுறை கூறுகிறார். "அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்" (1 இரா 19:10).

இங்கு எலியாவின் ஏக்கமெல்லாம் தான் தேவனுக்காக இவ்வளவு பக்தி வைராக்கியமாய் வாழ்ந்தும், தன் அரசனும், மக்களும் தேவனுடைய உடன்படிக்கையை தள்ளிவிட்டதினாலும், அவருடைய பலிபீடத்தை இடித்து அவருடைய தீர்க்கதரிசிகளை கொன்று, தன்னையும் கொல்ல தேடுகிறதினால், மேலும் மேலும் ஜனங்கள் தேவனுக்கு விரோதமாய் வாழ்வதை கண்டு தன்னுடைய ஊழியத்தை தொடர மனதில்லாமல் ஏற்பட்ட சோர்வினால் உண்டானதே தன்னை எடுத்துக்கொள்ளும்படியாய் அவர் தேவனிடம் கேட்ட வேண்டுதலாகும்.

இங்கு உண்டான சோர்வு, அவிசுவாசத்தினால் உண்டான சோர்வு அல்ல, அல்லது தேவனுக்காக போராட மனதில்லாததினால் உண்டான சோர்வு அல்ல, அல்லது தேவனால் இனி எதுவும் செய்ய முடியாது என்ற உணர்வினால் ஏற்பட்ட சோர்வு அல்ல, தன்னால் தேவனுக்கு ஒரு பிரயோஜனமான வாழ்வு வாழமுடியவில்லையே என்ற எண்ணமும், ஜனங்களின் குளிர்ந்து போன வாழ்க்கை நிலையுமே அவரை இப்படி வேண்டுதல் செய்ய வைத்தது.

எனவே தேவன் அவரை தைரியப்படுத்தி, அவர் செய்ய வேண்டிய வேலைகளை அவருக்கு கூறி, "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" (1 இரா 19:18) என்று கூறி அவரை ஆறுதல்படுத்தி, அவருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யும்படியாய் அவரை பெலப்படுத்தினார்.

இதையே நாம் ஏசா 40;29 வசனத்திலும் காண்கிறோம். எனவே சோர்ந்து போன வேளையில் தேவனால் பெலப்பட, நாம் சோர்ந்து போனோம் என்பதை முதலாவது தேவனிடம் அறிக்கையிட வேண்டும். அப்பொழுது "நம்முடைய பெலவீனத்திலே அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்" (2 கொரி 12:9). ஆனால் அதே நேரத்தில், தேவன் மேல் உள்ள விசுவாச குறைவினாலோ, சூழ்நிலைகளை குறித்த பயத்தினாலோ சோர்ந்து போய், போராட மனமற்றிறுப்பவனுக்கு வேதம் கூறும் ஆலோசனை "ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" (நீதி 24:10).

இங்கு நாம் காண்கிறது என்னவென்றால், ஒரு தேவ பிள்ளை சோர்ந்து போவதற்கு காரணம் அவிசுவாசம் அல்ல, அது தேவன் மேல் அவனுக்கு இருக்கும் ஒரு அன்பினாலும் ஏற்படலாம் என்பதையும், அதை அவரிடம் தெரிவிக்கும் பொழுது, ஒரு தாய் தன் பிள்ளையை கரடான பாதையில் சுமந்து செல்வது போல் சுமந்து செல்வார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதுவே யோபுவின் வாழ்விலும் நடந்தது. அவருடைய பல்வேறு வார்த்தைகள் தேவனை கேள்விக்கேட்பது போல இருக்கிறது. அவருடைய நண்பர்களும் அவருடைய வார்த்தைகள் அவிசுவாசத்தினால் உண்டானது என்று எண்ணினர். ஆனால் தேவன் யோபுவின் இருதயத்தை அறிவார். ஆதலால், அவரை ஆறுதல்படுத்தி ஆசிர்வதித்தார்.

எனவே நாம் சோர்ந்து போகும் வேளையில், அது எதினால் உண்டானது என்பதை நாம் முதலாவது புரிந்து கொள்ள வேண்டும். எது எப்படி இருந்தாலும் நம்முடைய சோர்வுகளை எல்லாம் தேவனுக்கு தெரியப்படுத்தும் பொழுது, அவர் அதைப் பொறுப் பெடுத்துக்கொள்வார். தேவன் நம்மிடம் எதிர்பார்பது எல்லாம் அவர் அதைப் பொறுப்

பெடுத்துக்கொள்வார் என்ற அறிவு நமக்கு இருக்க வேண்டும் என்பதே. தேவன் தாமே, நம் ஒவ்வொருவரையும், ஆறுதல்படுத்தி, தேறுதல்படுத்தி நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக, ஆமென்.

# காலங்கள்

## என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது (சங் 31:15)



காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது என்பது முக்காலங்களையும் அவர் ஆளுகிறவர் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு சாதாரண மனிதனால் இறந்த காலத்தில் நடந்து முடிந்த காரியங்களை மாற்றவோ, எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்களை நிருணயம் பண்ணவோ முடியாது. நிகழ்காலத்தின் மீதும் அவனுக்கு முழு ஆளுகையில்லை. இதை நாம் அன்றாடம் நமது வாழ்க்கையில் காண்கிறோம்.

நம்மால் அநேக நேரங்களில் குறிப்பிட்ட வேலைகளை அதற்கு குறித்த நேரத்திற்குள் செய்து முடிக்க முடிவதில்லை. குறித்த நேரத்தில் நாம் செல்ல வேண்டிய இடத்திற்கு நாம் செல்ல முடிவதில்லை. காரணம், காலம் (நேரம்) நமக்காக நிற்கப்போவதில்லை. நாம் தான் நேரத்தோடு இசைந்து சென்று வேலைகளை முடிக்க வேண்டும். எனவே காலங்கள் (நேரங்கள்) தான் நம்மை ஆளுகின்றன. ஆனால் தேவனுடைய காரியத்தில் அவர்தான் காலத்தை ஆளுகிறவர்.

தேவன் நிகழ்காலத்திற்க்கும், எதிர்காலத்திற்கும் பயன்படும் வகையில் கடந்த கால நிகழ்வுகளை மாற்றமுடியும், அமைக்க முடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மற்றொரு விதத்தில் சொல்ல போனால் மூன்று காலங்களிலும் நடக்கும் வெவ்வேறு நிகழ்வுகளை ஒன்றிணைக்க, அவர் எந்த காலத்தில் நடக்கும் எந்தவொரு நிகழ்வையும் அதற்கேற்ற விதமாய் மாற்றமுடியும். அப்படியாய் தேவன் கிரியை செய்த அநேக காரியங்கள் வேதத்தில் உள்ளது. அவற்றை இப்பொழுது காண்போம்.

யோசேப்பின் வாழ்க்கையில், அவருடைய தகப்பன் யாக்கோபு மரித்தபின்பு, அவருடைய சகோதரர்கள் அவரிடத்தில் வந்து கடந்த காலத்தில் தாங்கள் செய்த தீமையை மன்னிக்க வேண்டும் என்று கேட்டு கொண்டபோது, **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி 50:19,20).**

இங்கு நாம் காண்பது, யோசேப்பு கடந்த கால நிகழ்வுகளை ஏதோ நடந்து விட்ட தவறுகளாக பாராமல், அதிலும் தேவன் தம்முடைய திட்டத்தையே நிறைவேற்றினார் என்று கூறுகிறான். ஏனெனில் இவையாவும் நடப்பதற்கு முன்பதாகவே **ஆதி 37:5-11** வசனங்களில், எதிர்காலத்தில் நடக்க இருக்கும் காரியங்களை குறித்து சொப்பனத்தின் மூலம் யோசேப்பிற்கு தேவன் அவற்றை வெளிப்படுத்தினார். ஆனால், அவை நடப்பதற்கான எந்த சூழ்நிலையும் அந்நேரத்தில் இல்லை. ஆகிலும் முக்காலத்தையும் ஆளுகிற தேவன், ஒவ்வொரு காலத்திலும் அதற்கேற்றவிதமாய் சூழ்நிலைகளை மாற்றி இறுதியில் தாம் கூறியவற்றை நிறைவேற்றினார்.

யோசேப்பு இஸ்மவேலர் கையில் விற்கப்பட்டதும் **(ஆதி 37:28)**, போத்திபாரின் வீட்டிலிருந்து சிறைசாலைக்கு கொண்டு போகப்பட்டதும் **(ஆதி 39:20)**, பானபாத்திரக்காரன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்துவிட்டதும் **(ஆதி 40:23)**, பார்வோனுக்கு உண்டான சொப்பனமும் **(ஆதி 41:1)**, பானபாத்திரக்காரனுக்கு யோசேப்பின் நினைவு வந்ததும் **(ஆதி 41:9)**, சகல தேசங்களிலும் உண்டான பஞ்சமும் **(ஆதி 41:57)**, தேவனுடைய

திட்டத்தின்படியே சொப்பனத்தின் மூலம் யோசேப்பிற்கு சொல்லப்பட்ட எதிர்கால நிகழ்விற்கு நேராய் நடந்தது.

இக்காலங்களுக்கு ஊடாய் தேவன் யோசேப்பை பல்வேறு காரியங்களில் பழக்குவித்தார். இறுதியில் அவனை ஒரு நல்ல தலைவனாக, தேவ மனிதனாக நிறுத்தினார். இதைப்போன்ற காரியத்தையே நாம் மோசேயின் வாழ்விலும் காண்கிறோம். மோசேயின் பிறப்பு முதல் அவருடைய முடிவு வரை தேவனுடைய திட்டம் அவருடைய வாழ்க்கையில் நிறைவேறுதை நாம் காணலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக **ஆதி 3:15** இல் தேவன் சொன்ன **"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்"** என்ற வார்த்தையின் ஊடாகவே வேதத்தின் அனைத்து நிகழ்வுகளையும் தேவன் அமைத்திருக்கிறார். இங்கு காலங்கள் என்றவுடன் வெறும் காலநேரத்தின் (Time) மீது மட்டும் தேவன் ஆளுகை செய்கிறார் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. ஏனெனில் கால சூழ்நிலைகளின் மேலும், அண்ட சராசரங்களின் மீதும் (Universe) அவர் ஆளுகை உடையவராய் இருக்கிறார்.

இதையே நாம் யோசுவாவின் வாழ்க்கையிலும் காண்கிறோம். **யோசுவா 10:12-14** வசனங்களில் **"கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும், தரித்துநில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்தநாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்"**. இங்கு நாம் காண்கிறபடி சூரியன் தரித்தது, சந்திரன் நின்றது, சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு

பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது போன்ற வார்த்தைகள் கால சூழ்நிலைகளின் மேலுள்ள தேவனுடைய ஆளுகையை வெளிப்படுத்துகிறது.

இதையே நாம் எசேக்கியாவின் வாழ்க்கையிலும் காணலாம் **(2 இரா 20:11)**. மேலும் **யோபு 38:31-33** வசனங்களில் **"அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச்சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ? வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ?"**, இங்கு தேவனுடைய ஆளுகையை நாம் காணலாம்.

நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத எத்தனையோ விண்மீன் மண்டலங்களையும், நம்முடைய பூமியின் கால நிலைகளுக்கே அப்பாற்ப்பட்ட மற்ற கால நிலைகளையும் ஆளும் தேவன், காலத்திற்கு அப்பாற்ப்பட்டவர். அவருக்கு முன்பாக மனிதராகிய நாம் ஒன்றுமில்லை. அவரே சகலவற்றையும் சிருஷ்டித்தவர். அவர் கரங்களில் நம்முடைய காலங்கள் (இம்மைக்குரிய வாழ்க்கை மற்றும் மறுமைக்குரிய வாழ்க்கை) இருக்கிறது. எனவே நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் சகலவற்றையும் ஆளுகிற அவரையே சார்ந்து கொள்வோம், ஆமென்.

# எருசலேம் பயணம்

**எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று (சங் 122:2)**



**இந்த சிந்தனை ஆவிக்குரியரீதியில் வளருவதற்கே அன்றி, யாரையும், எதையும் குற்றப்படுத்த அல்ல.**

**எருசலேம் பயணம்:**

கிறிஸ்தவர்களில் அநேகர் ஒரு தடவையாவது எருசலேம் சென்று வர வேண்டும் என விருப்பம் உள்ளவர்கள். இதில் தவறேதும் இல்லை. ஆனால் நாம் யாரோடு எருசலேம் செல்ல போகிறோம் என்பதே கேள்வி. ஏனென்றால் அநேக சுற்றுலா அமைப்பாளர்கள் எருசலேமிற்கு நம்மை அழைத்து செல்ல முடியும். அதே நேரத்தில் கிறிஸ்துவும் நம்மை எருசலேமிற்கு அழைத்து செல்வதாக வாக்களித்திருக்கிறார். ஆயிர வருட அரசாட்சியில் அவர் எருசலேமில் இருந்து அரசாளுவார். அதுமாத்திரமல்ல ஆயிர வருட அரசாட்சிக்கு பின்பும், புதிய வானம், புதிய பூமியிலும், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரமே காணப்படுகிறது (**வெளி** 21:1,2). எனவே தேவ பிள்ளைகள் அனைவரும் ஒரு நாள் எருசலேமிலே இருக்க போவது உறுதி.

இப்போழுது இவ்விரண்டில் (சுற்றுலா அமைப்பாளர்கள் அல்லது ஆண்டவர்) எதை நாம் தெரிந்து கொள்வது என்பதே கேள்வி. எனவே இவ்விரண்டு வழிகளையும் நாம் ஒப்பிட்டு பார்ப்போம்.

சுற்றுலா அமைப்பாளர்கள் நாம் விரும்பின நேரத்தில் நம்மை அழைத்து செல்வார்கள். ஆனால் ஆண்டவரோ அவர் நினைத்த வேளையிலேயே வந்து நம்மை கூட்டிச்செல்வார். எனவே இங்கு நமக்கு பொறுமை அவசியமாய் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சுற்றுலா அமைப்பாளர்களுக்கு நாம் கட்டணம் (கிரயம்) செலுத்த வேண்டும். ஆண்டவரோ தம்மையே கிரயமாக கொடுத்து நம்மை தகுதிப்படுத்தியிருக்கிறார். நாம் செல்வதற்கு நமது அரசாங்கத்திடமும், இஸ்ரவேல் அரசாங்கத்திடமும், பாஸ்போர்ட், விசா போன்ற காரியங்களில் அனுமதி பெற வேண்டும். ஆனால் ஆண்டவரோ இரட்சிப்பு என்னும் காரியத்தின் மூலம் நமக்கு பாஸ்போர்ட், விசா எல்லாம் கொடுத்துவிட்டார்.

மேலும் சுற்றுலா அமைப்பாளர்கள் நம்மை ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் மட்டும்தான் அங்கு தங்க வைக்கமுடியும். ஆனால் ஆண்டவரோ நாம் என்றென்றும் எருசலேம் குடிமக்களாய் இருக்க, நம்மை அங்கு கொண்டு செல்ல இருக்கிறார். அங்கு நாம் எப்பொழுதும் ஆண்டவரோடு இருப்போம். மேலும், சுற்றுலா அமைப்பாளர்கள் நம்மை எருசலேம் அழைத்து செல்லும்பொழுது, விமானத்தில் மும்பாய் (via Mumbai) போன்ற நகரத்தின் வழியாக நம்மை அழைத்து செல்வர். ஆனால், ஆண்டவரோ நம்மை பரலோகத்தின் வழியாக (via Heaven) (பரம) எருசலேம் அழைத்துச் செல்வார். இப்பொழுது நமது மாம்ச சரீரம் மாத்திரமே எருசலேம் செல்ல முடியும். ஆனால், ஆண்டவர் நம்மை இப்படியே கூட்டி செல்லாமல், மகிமையுள்ள மறுரூபமான சரீரத்தை நமக்கு கொடுத்து அதனையே கூட்டி செல்வார்.

மேலும் சுற்றுலா அமைப்பாளர்கள், நாம் நம்மோடு சிலரையும் அழைத்து சென்றால், நமக்கு கட்டண சலுகைகளை கொடுப்பர். ஆனால் ஆண்டவரோ, நாம் பெற்ற இரட்சிப்பை மற்றவருக்கும் அறிவித்து அவர்களையும் (பரம) எருசலேம் பயணத்திற்கு தகுதியுள்ளவர்களாக்கும் பொழுது, நம்மோடு அனைவரையும் இலவசமாகவே (பரம) எருசலேமிற்கு கூட்டிச்செல்வார். அதே நேரத்தில் அநேகரை ஆண்டவர் அண்டை கூட்டி வந்ததற்கு நமக்கு பல

பரிசுகளையும் தருவார். ஏனெனில் **"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள்" (தானி 12:3)** நிச்சயமாகவே பலனடைவார்கள்.

எனவே, ஆண்டவர் நமக்கு எருசலேம் செல்வதற்காண வாய்ப்புகளையும், சூழ்நிலைகளையும் தருவாரானால், நாம் தாராளமாக செல்லலாம். ஆகிலும் நமது இக்கால எருசலேம் பயணம், நமது வருங்கால எருசலேம் பயணதிற்கு ஆவிக்குரியரீதியில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாத வரையில் அதனால் பிரயோஜனமில்லை.


எனவே இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவென்றால், நாம் இப்பொழுது இருக்கிற எருசலேமிற்கு சுற்றுலா அமைப்பாளர்கள் மூலமாக போவதை பார்க்கிலும், வரப்போகிற மகிமையான எருசலேமிற்கு பிரஜைகளாய் மற்றவரையும் ஆயத்தப்படுத்தி அழைத்து செல்லும் பரலோக சுற்றுலா அமைப்பாளர்களாகவே நாம் இருக்க ஆண்டவர் விரும்புகிறார். நமக்கும் அதுவே விருப்பமாக இருக்கட்டும். அப்படியென்றால் நாம் இப்பொழுது வேறு எந்த நாட்டிற்கும், இடத்திற்கும் செல்ல வேண்டாமா? தாராளமாக செல்லலாம். ஏனென்றால் அவை எல்லாம் இன்னும் சிறிது காலத்தில் அக்கினிக்கு இரையாக போகின்றன **(2 பேதுரு 3:7)**. எனவே ஆண்டவர் அனுமதித்தால் நாம் அவற்றை போய் பார்க்கலாம். ஏனென்றால் நம்மால் அவற்றை பிறகு காண இயலாது.

எனவே சுற்றுலா அமைப்பாளர்களுடன் எருசலேம் சுற்றுலா போவதை காட்டிலும், அதே பணத்தை, நேரத்தை ஆண்டவருக்காக செலவிட்டு அநேகரை (பரம) எருசலேம் பயணத்திற்கு (குடி பெயர்தலுக்கு) தகுதியுள்ளவர்களாக்குவதே, நம் வாஞ்சையாய் இருக்கட்டும். எனவே உலகமெங்கிலும் செல்வோம், அனைவரையும் எருசலேம் நோக்கி திருப்புவோம்.

இறுதியாக, இக்கால எருசலேம் பயணத்தின் மூலம், ஒரு நாள் நாம் இதே இடத்தில் மகிமையுள்ள மறுருபமான சரீரத்தோடு, எவ்வித கவலையுமின்றி, சமாதானமாய் ஆண்டவருடைய ஆளுகையில் அவரோடு இருப்போம் என்ற எண்ணமே நமக்கு இந்நகரத்தை பார்க்கும் பொழுது உண்டாக வேண்டும். அப்பொழுதே, நமது இக்கால பயணம், நம்மை மறுபடியும் எருசலேமிற்கு ஆண்டவரோடு போக வேண்டும் என்ற விருப்பத்தையும், உத்வேகத்தையும் உண்டாக்கும், ஆமென்.

# மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும்

**மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் (சங்118:8)**




நாம் பிறந்ததில் இருந்து, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், ஒரு சில மனிதரை சார்ந்தே நம் வாழ்க்கை பயணம் செல்கிறது. பெற்றோர், உடன் பிறந்தோர், ஆசிரியர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர், கணவன், மனைவி, பிள்ளைகள், வேலை ஸ்தலத்தில் உள்ளோர் என்று ஒவ்வொரு மனிதனின் / மனுஷியின் வாழ்க்கையும் இப்படிப்பட்ட மனிதர்களை சார்ந்தே / நம்பியே கடந்து செல்கிறது.

தேவன் அப்படியே நம் வாழ்க்கை முறையை உண்டாக்கியிருக்கிறார். **லூக் 2:52** கூறுகிறது இயேசுவானவரும் மனுஷர் தயவில் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் என்று. மேலும் கிறிஸ்துவும் தம் பணியை செய்ய சீஷர்களையே (மனிதர்களையே) நம்பி அவர்களிடம் அதை ஒப்புவித்தார் **(மத்**

28:19,20). எனவே மனிதர்களை சாராமல் / நம்பாமல் ஒருவராலும் வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாது என்பது உண்மை.

ஆனால் **ஏசா 2:22** கூறுகிறது **"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்"** என்று. மேலும் மேற்கண்ட **சங் 118:8** வசனத்திலும் **"மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்"** என்று காண்கிறோம். மேலும் **யோ 2:23-25** வசனங்களில் **"பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை"**.

இங்கு நாம் காண்கிறபடி கிறிஸ்துவும் **"மனிதர்களை நம்பி இணங்கவில்லை"** என்று வாசிக்கிறோம். எனவே ஒருபுறம் அவர் சில மனிதரை தமது சித்தத்தை செய்ய ஏற்படுத்தினாலும், அவர் பொதுவாக மனிதரை நம்பி அவர்கள் சொல்லுக்கும், செயலுக்கும் இணங்கவில்லை. ஏனெனில் 24 வசனம் கூறுகிறது **"இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்"** என்று, மேலும் 25 வசனம் கூறுகிறது **"மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை"** என்று. அவர் தேவனாக இருக்கிறபடியால், மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தபடியால் அவரால் எந்த எந்த காரியங்களில் மனுஷரை சார வேண்டும், எவ்வெவற்றில் அவர்களை சார கூடாது என்பதை அறிந்திருந்தார்.

ஆனால் சாதாரண மனிதராகிய நம்மால் இவ்வாறு மற்ற மனிதரை ஆராய்ந்து அறிவது கூடாத காரியம். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையே **சங் 118:8** இல் காண்கிறோம். நாம் மனிதரை நம்பாமல், நம் வாழ்க்கையில் உடல் ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் ஒரு அடி கூட முன் செல்ல முடியாது. நம் ஆசிரியர் கூறியதை நம்பிதான் நம் அறிவை வளர்த்து கொண்டோம், வாழ்க்கையில் முன்னேறுகிறோம்.

தினமும் பேருந்து ஓட்டுநரை நம்பிதான் நாம் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்கிறோம். எனவே அவர்களை நம்பாமல், நம்மால் வாழமுடியாது. ஆனால் அதே நேரத்தில் நாம் நம்பின எதிர்பார்ப்புக்கு ஏற்றார் போல் மற்ற மனிதர்கள் நூறு சதவிகிதம் எல்லா நேரத்திலும் செயல்படுவார்களா என்பதே கேள்வி? இதன் பதில் இல்லை என்பதே ஆகும்.

நமக்கு மிகவும் நெருக்கமானவர்கள், குடும்பத்தார் முதற்கொண்டு எந்த மனிதரும் நாம் நினைத்தாற் போல் செயல்படுவதில்லை. ஏனெனில் ஒவ்வொரு மனிதரின் வாழ்வும் அவர்களை மையப்படுத்தி வாழப்படுவதே தவிர நம்மை மையப்படுத்தியது அல்ல. ஒரு ஒட்டுநரை நம்பி நாம் பேருந்தில் ஏறினாலும், பேருந்து வழியில் பழுதடைந்து நின்றால் அதற்காக ஒட்டுநர் நம்மை கொண்டுபோய் சொன்ன இடத்தில் சேர்க்க முடியவில்லையே என்று கவலைப்பட போவதில்லை. நமக்கு, நோய்க்கு மருந்து தரும் மருத்துவரும் அப்படியே. நம்முடைய ஆசிரியர்களும் அப்படியே.

இப்படியே நாம் பார்க்கபோனால், நாம் சார்ந்து இருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு குறிப்பட்ட அளவே நாம் சார்ந்து கொள்ளகூடியவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாம் நம்மையே சார்ந்து வாழவும் முடியாதவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் அநேக நேரங்களில் நமக்கு நன்மையானது இன்னது என்று தெரிந்தும் நாம் நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளையே செய்கிறோம். இதையே **ரோ 7:15-25** வசனங்களில் நாம் காண்கிறோம்.

எனவே நாம் முழுமையாய் நம்பகூடிய, சார்ந்துகொள்ளகூடிய, எல்லாவற்றிக்கும் மேலாக பற்றிக்கொள்ளகூடிய ஒருவர் உண்டென்றால் அவர் தேவன் ஒருவரே. எனவே தான் **சங் 118:8** இல் **"கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்"** என்று கூறப்பட்டுள்ளது. ஆம், ஏதோ இம்மைக்கான தேவைகளுக்காய் மாத்திரம் அவரை நம்புகிறவர்களாய் அல்ல, இம்மைக்கும், மறுமைக்குமான வாழ்க்கை முழுவதிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் அவரையே பற்றிக்கொண்டவர்களாய் இருப்பதே நலமாகும்.

ஏனென்றால் அவரே நமது கடந்தகால, நிகழ்கால மற்றும் வருங்கால வாழ்க்கை காரியங்கள் முழுவதையும் அறிந்தவர், அவற்றை

ஆளுகைசெய்பவர். மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறிந்தவர் மாத்திரமல்ல, மனுஷரின் பாதைகளை வகுப்பவரும் அவரே. "இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைப்பவரும்" அவரே. "நம்மை நித்திய ஜீவகரையில் சேர்ப்பவரும்" அவரே. அவரை நம்பி வாழும் வாழ்க்கை இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட, அற்புதமாய் நடத்தப்படும் வாழ்க்கையாகும். **அப் 17:28** கூறுகிறது **"ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்"** என்று.

மேலும் **சங் 22:10** கூறுகிறது **"கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்ததுமுதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்"** என்று. எனவே இப்படியாய் நாம் தேவனை நம்ப / சார்ந்துகொள்ள / பற்றிக்கொள்ள, நமக்கு தேவனோடு பிரியாத நல்ல ஐக்கியம் வேண்டும். வேறு எந்த மனிதரோடு கொண்டுள்ள ஐக்கியத்தை காட்டிலும், தேவ ஐக்கியத்தை நாம் அதிகமாய் தேடினால் மனிதர் நம்மை கைவிடும் நேரங்களிலும், அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். எனவே தேவனையே சார்ந்துகொள்வோம். மனிதரையும் தேவன் தந்தருளும் எல்லைக்குள்ளே சார்ந்துகொள்வோம். ஏனெனில் (அவரே) **"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி 13:8)** ஆமென்.

குறிப்பு: **சங்கீதம் 118:8 என்னும் இவ்வசனம் வேதத்தின் மைய வசனமாகும். நம் வாழ்க்கையிலும் தேவனே மையமாய் இருப்பாரானால் நாம் ஒருபோதும் தனித்துவிடப்படுவதில்லை.**

# நல்ல மேய்ப்பன்

## நானே நல்ல மேய்ப்பன் (யோ 10 : 11)




பரிசுத்த வேதாகமத்தில் சபையானது பல பெயர்களை பெற்றிருந்தாலும், அவற்றில் முக்கியமானது தேவனுடைய மந்தை (ஆட்டு மந்தை) என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களும் தேவ மந்தையாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக ஆட்டு மந்தையானது தன்னிசையாக செயல்பட கூடியதாயிராமல், எப்பொழுதும் ஒரு மேய்ப்பனுடைய கண்காணிப்பின் கீழ், அவனுடைய போஷிப்பின் கீழ், பாதுகாப்பின் கீழ் செயல்படகூடியதாக உள்ளது. அதுபோலவே தேவனுடைய ஜனங்களும் எப்பொழுதும் தேவனுடைய ஆளுகையின் கீழ், பாதுகாப்பின் கீழ், போஷிப்பின் கீழ் செயல்படகூடியவர்கள்.

ஆகிலும், பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய ஜனங்களை மேய்க்கும்படியாக மோசே, தாவீது போன்ற சில தேவ மனிதர்களை தெரிந்தெடுத்தார். புதிய ஏற்பாட்டிலும் மேய்ப்பர் ஊழியத்தை ஏற்படுத்தி அதின் மூலம் சபை மேய்ப்பர்கள் (ஆயர்கள்) வழியாக தம்முடைய சபையை போஷித்து, பாதுகாத்து நடத்தி வருகிறார். இப்பொழுது ஒரு

மேய்ப்பனின் குணநலங்களை குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **யோவான் 10ஆம்** அதிகாரத்தில் கூறியதை காண்போம். **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை நல்ல மேய்ப்பன் என்று கூறுகிறார் (யோ 10 : 11).** மேலும் பிரதான மேய்ப்பரும் அவரே. எனவே அவர் கூறும் மேய்ப்பனின் குணநலங்களை காண்போம்.

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்" (யோ 10:1,2),** மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மேய்ப்பனே அவற்றை நேரடியாக சந்திக்க கூடியவனாயிருக்கிறான். நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை நேரடியாக நம்முடைய வாழ்க்கையில் சந்தித்து, நம்மை தம்முடைய மந்தையாக சேர்த்துகொண்டார்.

தேவனுடைய நற்செய்தியை அறிவித்து மக்களை சபையாக கூட்டிச் சேர்க்கும் மேய்ப்பர் ஊழியத்தை செய்வோரும் அப்படியாகவே மக்களை நேரடியாக (வெளிப்படையாக) சந்தித்து, எந்த ஊள் நோக்கமும் இல்லாமல் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பிற்காகவே அவர்களை ஆண்டவரண்டையில் சபையாக கூட்டி சேர்கின்றனர். ஆனால் வேறுவிதமாய் மக்களை தம் பக்கம் இழுக்கும் நோக்கத்துடன் செயல்படும் மனிதரோ, கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் (யோ 10:2). எனவே இவர்கள் நல்ல மேய்ப்பர்களாயிராமல், கள்ள மேய்ப்பரும், ஆடுகளையே கொள்ளையிடுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

**"வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப்**

**பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்" (யோ 10:3,4,5).** மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மந்தை அண்டை வந்த நல்ல மேய்ப்பர் அவற்றை பேர் சொல்லி அழைக்கிறார். அவைகளும் அவருடைய சத்தத்தை அறிந்து அவருக்கு பின்செல்லுகின்றன. இவ்வாறாக ஆண்டவரும் நம்மையும் பெயர்சொல்லி அழைத்து நீ என்னுடையவன் என்று நம்மை சேர்த்துக்கொண்டார்.

நாமும் அவருடைய சத்தத்தை அறிந்தவர்களாய் இருப்போமானால், அவருடைய சத்தத்திற்கு (வார்த்தைக்கு) மாத்திரம் செவிக்கொடுத்து அவர் பின்சென்று, மற்ற உலக சத்தங்களை நம்மை விட்டு விலக்கிப்போடுவோம். பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை போலவே, அவருடைய ஊழியர்களான மேய்ப்பர்களும், தங்களுக்கென்று தேவன் கொடுத்த மந்தையின் நிலையை நன்கு அறிந்தவர்களாய், மந்தையின் தேவைகளை உணர்ந்தவர்களாய், பெயர் சொல்லி அழைப்பதுபோல, தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஆத்துமாவின் மேலும் கரிசனை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அதேவேளையில், மந்தையோடு இப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவும், கரிசனையும் இல்லாமல் அவற்றை மேய்க்க முற்படுகிறவர்களை விட்டு அவை ஓடிப்போம்.

**"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோ 10:10),** மேற்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் (மறுபிறப்படைந்து பெற்ற புதிய ஜீவன்), அது பரிபூரணப்படவும் (கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி) வந்தேன் என்கிறார். அதுபோலவே தேவ ஊழியக்காரரான, மேய்ப்பர்களும் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட மந்தை ஆவிக்குரிய ஜீவனோடு காணப்படவும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியாகிய பூரண புருஷர்களாய் மாறவும் தக்கதாய் அவற்றை மேய்க்க வேண்டும். ஆனால் பொல்லாத மேய்ப்பகளின் மூலமாகவோ, ஆடுகளின் ஜீவன் (சபை ஆத்துமாக்களின் ஜீவன்) கொள்ளையாடப்பட்டு, பரிபூரணப்படுவதற்கு பதிலாக (கிறிஸ்துவின்

நிறைவான வளர்ச்சி), உலக வேஷத்தை தரித்துக் கொண்டவர்களாய் மாற்றப்படுகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக **யோ 10:11 இல் "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்"** என்று ஆண்டவர் கூறியுள்ளபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஆடுகளாகிய நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இவ்வாறாக ஊழியத்தை செய்கிற மேய்ப்பர்களும் தங்களிடம் தேவன் தந்த மந்தையை பாதுகாத்து, அவற்றின் ஜீவனை காப்பாற்ற தம் ஜீவனையும் (எல்லாவற்றையும் இழக்க) கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தை செய்த அநேக தேவ பிள்ளைகளை நாம் சபை வரலாற்றில் காண்கிறோம். அவர்களுடைய தியாகமான ஊழியத்தினால் இன்று எத்தனையோ இடங்களில் தேவனுக்கு மகிமையாய் சபைகள் எழும்பியிருக்கிறதை நாம் காணலாம். இவ்வாறாக அவர்கள் ஊழியத்தை செய்வதற்கு காரணம், அவர்களின் பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைக்காக தன் ஜீவனையே கொடுத்திருக்கிறார்.

ஆனால், வெறும் கூலிக்காகவே (ஆதாயத்திற்காகவே) மந்தையை மேய்க்க வந்த பொல்லாத மேய்ப்பன், ஓநாய் (பாடுகள், கள்ள உபதேசம்) வருகிறதை கண்டு ஆடுகளை (சபையை) விட்டு ஓடிப்போகிறான் (கவலைப்படாதிருக்கிறான்). **"அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்" (யோ 10:12,13).**

எனவே சபை ஊழியத்தை (மேய்ப்பர் ஊழியத்தை) செய்ய அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, தாங்கள் தங்களுக்காக சபையை மேய்க்காமல், தங்களிடத்தில் கணக்கு கேட்கப்போகிற பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவே, சபையாகிய மந்தையை மேய்த்து, ஆண்டவர் வருகையில் அவரண்டை சபையை ஒப்படைக்கிறவர்களாய் காணப்பட வேண்டும். **"அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோ 10:16).**

மேலும் மேய்ப்பர் ஊழியமாகிய சபை ஊழியத்தில் மற்ற ஊழியங்களாகிய சுவிசேஷம் சொல்வதும், போதகம் செய்வதும் அடங்கியிருக்கிறது. மேலும் சபையை குறித்த ஒரு தீர்க்கதரிசன பார்வை, மேய்ப்பர் ஊழியத்தை செய்பவர்க்கு தேவையாயிருக்கிறது. இவை எல்லாவற்றையும் ஒருங்கே செய்யும் பொழுது, அது அப்போஸ்தல ஊழியத்திற்கு வழியாகவும் இருக்கிறது.

எல்லாவற்றிற்க்கும் மேலாக ஒரு நல்ல மேய்ப்பனுக்கு **“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்” (சங் 23:1)** என்ற தாவீதின் அனுபவம் வேண்டும். ஏனெனில் இந்த தாவீதையே **“கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை (தாவீதை), தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, (கர்த்தரே) அழைத்துக்கொண்டுவந்தார்” (சங் 78:71)**. எனவே நல்ல மேய்ப்பனானவன், தன்னுடைய கையில் கொடுக்கப்பட்ட மந்தையை உண்மையுடன் மேய்த்து பிரதான மேய்ப்பராகிய ஆண்டவரண்டை கூட்டிச்சேர்ப்பானாக. **“அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்” (1 பேதுரு 5:4)**. வேதத்தில் ஆண்டவர் பல இடங்களில் மேய்ப்பகளை குறித்து கூறியுள்ளார், **“அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்” (யோ 21:25)** ஆமென்.